

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | செப்டம்பர் 05, 2013 | புரட்சி 12 | முழக்கம் 34 | விலை: ரூ.3.00

## தலைநகரில் மாநாடு போல் நடந்த நாத்திகர் விழா

# தடை தகர்த்து பேரணி வெற்றி நடை



திராவிடர் விடுதலை கழக நாத்திகர் விழா-மூடநம்பிக்கை எதிர்ப்புப் பேரணி எழுச்சியோடு பறை இசை முழங்க, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கிலிருந்து செப். 1, மாலை 4.30 மணியளவில் பகுத்தறிவு முழக்கங்களுடன் புறப் பட்டது. கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தின சாமி தலைமையேற்க, புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேரணியின் நோக்கத்தை செய்தியாளர்களிடம் விளக்கினார்.

“பகுத்தறிவுப் பரப்புரை நடத்துவதற்கும் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி நடத்துவதற்கும் சட்டப்படியே உரிமை உண்டு என்பதை நிலை நாட்டி நடத்தப்படுகிறது இப்பேரணி. மராட்டிய அரசு கொண்டு வந்ததைப்போல தமிழ்நாட்டிலும் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தியும், நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கோயிலில் குவிந்து கிடக்கும் தங்கத்தை அரசு பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும், இந்தப் பேரணி நடத்தப்படுகிறது” என்று குறிப்பிட்டார்.

500க்கும் மேற்பட்ட பெண், ஆண், இளைஞர்கள் பகுத்தறிவு முழக்கமிட்டு வந்தனர். தோழர்கள் கையில், வாயில், நெஞ்சில் அலகுகுத்தி வந்தனர். பெண்கள் பகுத்தறிவு முழக்கமிட்டு தீச்சட்டிகளை ஏந்தி வந்தனர். புதுவையிலிருந்து லோகு. அய்யப்பன் தலைமையில் இரண்டு பேருந்துகளில் தோழர்கள்



திரண்டு வந்திருந்தனர். சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, நாகை, மதுரை, நெல்லை, தூத்துக்குடி, விழுப்புரம் மாவட்டங்களிலிருந்தும் பேரணியில் பங்கேற்க தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். 5.30 மணியளவில் பேரணி லேங்க்ஸ் கார்டனில் முடிவடைந்தது.

வி.எம். சாலையில் 5.30 மணியிலிருந்தே மேட்டூர் டி.கே.ஆர். குழுவினர் இசை நிகழ்ச்சி தொடங்கி 7 மணி வரை நடந்தது. தொடர்ந்து பறை இசையும் அதைத் தொடர்ந்து சுயமரியாதை கலை பண் பாட்டுக் கழகம் சார்பில் சோதிடம், தீமிதி, சாமியார் மோசடிகளை விளக்கும் வீதி நாடகங்களும் நடை பெற்றன. மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை யில் மண்டல அமைப்பு செயலாளர் அன்பு தனசேகரன் வரவேற்புரையாற்ற பொதுக் கூட்டம் தொடங்கியது. மாநாட்டு மேடைக்கு வீரமரண மடைந்த மராட்டிய பகுத்தறிவுப் போராளி தபோல்கர் பெயர் சூட்டப்பட்டதோடு அவரது படத்தையும் மருத்துவர் எழிலன் திறந்து வைத்து மூடநம்பிக்கைகளை தோலுரித்துக் காட்டும் பகுத்தறிவு உரை நிகழ்த்தினார். தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, அருண் ஆகியோருக்கு

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

# கோயிலில் முடங்கும் ‘கல் முதலாளி’களின் தங்கம்!

டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு நாளுக்கு நாள் சரிந்து வருகிறது. ரூபாய் மதிப்பு வீழ்ச்சியை சரிகட்டுவதற்கு கோயிலுக்குள் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை முன் வைப்பதற்கே பலரும் அஞ்சுகிறார்கள்.

பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பணக்கார ‘கல் முதலாளி’களின் கோயில்களில் முடங்கிக் கிடக்கும் பல லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத்தில் கை வைத்தால் பார்ப்பன ஆதிக்கத்தில் கை வைத்ததாகவே பார்ப்பனர்கள் மிரட்டுகிறார்கள்.

பெட்ரோலியப் பொருட்களுக்கும் தங்கத்துக்கும் இறக்குமதி செய்ய பெருமளவில் அமெரிக்க டாலர்கள் தேவைப்படும் நிலையில் டாலர் பற்றாக்குறையை சமாளிக்க கோயில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைப் பயன்படுத்தலாம் என்ற யோசனை முன் வைக்கப்படுகிறது.

முடங்கிக் கிடக்கும் தங்க நகைகளை ரிசர்வ் வங்கி வாங்கி, தங்கக் கட்டிகளாக உருக்கி, இருப்பில் வைத்துக் கொள்ளலாம் என்பதே இந்த யோசனை.

உலகிலேயே அதிகமான தங்கக் கட்டிகளை வைத்துள்ள நாடு அமெரிக்கா. இரண்டாவது இந்தியா. அமெரிக்காவின் தங்கம் அரசுக் காப்பகத்தில் அரசு சொத்தாக உள்ளது. அதனால்தான் டாலர் தங்கமாக கருதப்படுகிறது.

இந்தியாவில் அரசு ரிசர்வ் வங்கியில் சிறிதளவு தங்கம் உள்ளது. அதிகமாக வீடுகளில் நகைகளாகவும் இன்னும் அதிகமாக கோயில்களில் கடவுளின் ஆபரணங்களாகவும் சொத்துகளாகவும் உள்ளன.

இப்படி கோயில்களில் முடங்கிக் கிடப்பது பல்லாயிரம் டன்கள்.

திருப்பதி ஏழுமலையான், தில்லை நடராசன் கோயில்களில் கூரையே தங்கத்தில் வேயப்பட்டுள்ளது. உலகிலேயே பணக்காரக் கோயிலான திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சுமார் 1000 டன் தங்க நகைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இந்தியாவில் இந்த ஆண்டு இறக்குமதியாக இருக்கும் தங்கத்தைவிட இரண்டு மடங்கு அதிகம்.

இந்தியா முழுதும் உள்ள கோயில்களில் 18 ஆயிரம் முதல் 30 ஆயிரம் டன் வரை தங்கம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மராட்டிய மாநிலத்திலுள்ள ஷீரடி சாய்பாபா, மும்பை சித்தி விநாயகர், திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயில்கள் ஏராளமான தங்கத்தைக் குவித்து வைத்திருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தை பன்னாட்டு நிறுவனங்களும் பெரும் தொழில் நிறுவனங்களும் சுரண்டுவதற்கு கதவை திறந்துவிட்ட இந்திய பார்ப்பன ஆட்சிகள் அவர்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் வரி சலுகைகளை வழங்குகிறது. வெளிநாட்டு வங்கிகளில் குவிந்து கிடக்கும் பணமும் பல லட்சம் கோடி. இந்த சுரண்டல்களை எல்லாம் நியாயப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்ததில் பார்ப்பன அதிகார வர்க்கம், பன்னாட்டு நிறுவனங்கள், அவர்களோடு கை கோர்க்கும் அரசுகளுக்கு முக்கிய பங்கு உண்டு.

இப்போது இந்தியாவின் நடப்பு கணக்குப் பற்றாக்குறை (ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் உள்ள டாலர் மதிப்பிலான இடைவெளி) 9,420 கோடி அமெரிக்க டாலர் (5,65,200 கோடி ரூபாய்) இது நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட இரண்டு மடங்கு அதிகம்.

இந்தியாவின் அன்னியச் செலாவணி (அதாவது அமெரிக்க டாலர்) கையிருப்பு ரூ.29,000 கோடி டாலர் பெட்ரோலியப் பொருள்கள், தங்கம் இறக்குமதிக்கு டாலர்களிலேயே தர வேண்டும். இதற்கிடையே அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் திருப்பித் தர வேண்டிய வெளிநாட்டுக் கடன் மட்டும் 17,200 கோடி டாலர். இதைத் திருப்பி தந்துவிட்டால் கையிருப்பு 2500 கோடி டாலர் மட்டும்தான் இருக்கும். (வெளிநாட்டுக் கடன்களில் 44 சதவீதம் வாங்கியிருப்பது டாட்டா, அம்பானி நிறுவனங்களே. இந்தப் பணக்கார தனியார் நிறுவனங்கள் வாங்கியிருக்கும் வெளிநாட்டுக் கடன்களுக்கும் இந்தியாதான் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் மொத்த வெளிநாட்டுக் கடன் 6 ஆண்டுகளில் 30 மடங்கு உயர்ந்துள்ளது. 2012 மார்ச் நிலவரப்படி மொத்த வெளிநாட்டுக் கடன் 43,43,400 கோடி ரூபாய். ரூபாய் மதிப்பு சரிவடைய இதுவும் ஒரு காரணம்)

இவ்வளவு சுரண்டல் கொள்ளைகளையும் நியாயப்படுத்திக் கொண்டு நாட்டை பொருளாதார வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதாக ஏமாற்றியதில் பார்ப்பன ஆளும் வர்க்கத்துக்கும் ஆட்சியாளர்களுக்கும் முக்கியப் பங்கு உண்டு.

இப்போது மக்களைக் காப்பாற்ற தங்கள் ஆதிக்க பீடமான கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைப் பயன்படுத்தலாம் என்றால் கைவைக்க விட மாட்டோம் என்று அலறுகிறார்கள்.

“கோயில் தங்கத்தில் கை வைப்பது தேச விரோதம்; அனுமதிக்க முடியாது; நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் போகிறேன்” என்கிறார், பார்ப்பன சுப்ரமணியசாமி.

“ரூபாய் மதிப்பு சரிந்து வருவதைச் சரிகட்ட கோயில் நகைகளை எடுக்க அனுமதிக்க மாட்டோம்; விற்க முயற்சித்தால் போராட்டம் நடத்துவோம்” – என்கிறார், விசுவ பரிஷத் தலைவர் பிரவீண் தொகாடியா.

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்த அதே கும்பல் தான் ‘கல்முதலாளி’ களிடம் முடங்கிக் கிடக்கும் தங்கத்தில் கை வைக்க அனுமதியோம் என்று கொக்கரிக்கிறது.

இந்தப் பின்னணியில்தான் திராவிடர் விடுதலைக் கழகம் நாட்டின் பொருளாதார மீட்புக்கு முடங்கிக் கிடக்கும் கோயில் நகைகளைப் பயன்படுத்து! என்ற முழக்கத்தை முன் வைக்கிறது.

பன்னாட்டு நிறுவனங்களின் வரி ஏய்ப்புகளைத் தடுக்க வேண்டும்; அவர்களுக்கான வரிச் சலுகைகளை நிறுத்த வேண்டும், அத்துடன் கோயிலில் முடங்கிக் கிடக்கும் கல் முதலாளிகளின் பல்லாயிரம் டன் நகைகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற முழக்கத்தை முன் வைத்து மாவட்ட தலைநகரங்களில் செப்.13–இல் திராவிடர் விடுதலைக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று தலைமை செயற்குழு முடிவெடுத்துள்ளது.

தயாராவீர், தோழர்களே!

# விடுமுறை நாளில் உயர்நீதிமன்ற சிறப்பு அமர்வு நடத்திய விசாரணை



பகுத்தறிவு கருத்துகளைப் பரப்பும் உரிமை, நாத்திகர்களுக்கு, பகுத்தறிவாளர்களுக்கு உண்டு என்பதை திராவிடர் விடுதலைக் கழகம் உறுதிப்படுத்தியுள்ளது. மூடநம்பிக்கைக்கு எதிரான பேரணி சமூகப் பதட்டத்தையும் மத மோதல்களையும் உருவாக்கும் என்று அரசு முன் வைத்த வாதங்களை உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை.

திராவிடர் விடுதலைக் கழகம் செப்டம்பர் முதல் தேதி மாலை மயிலை அம்பேத்கர் பாலத்திலிருந்து வி.எம். சாலை வரை நாத்திகர் விழாவையொட்டி மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி நடத்த காவல்துறையிடம் கேட்டது. மாநகர காவல்துறை ஆணையர் மறுத்து விட்டார். கழக சார்பில் தடையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

நீதிபதி கே.கே. சசீதரன் முன் ஆகஸ்டு 30 ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்தது. கழக சார்பில் வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை அருண் ஆகியோர் மனுக்களை தாக்கல் செய்தனர். மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர். பிரசாத் வாதாடினார். அரசியல் சட்டத்தில் ஒரு குடிமகனுக்கு அடிப்படை கடமையாக அறிவியல் மனப் பான்மையை உருவாக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டி, இந்தத் தடையாணை அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்று வாதிட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர்கள் இந்த ஊர்வலமே சமூக பதட்டத்தை உருவாக்கும் என்று வாதிட்டனர். நீதிபதி கே.கே. சதீதரன் வழக்கை திங்கள்கிழமை (பேரணி நடப்பதற்கு அடுத்த நாள்) ஒத்தி வைப்பதாக கூறினார். கழக சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர், திங்கள் கிழமை ஒத்தி வைப்பதால் எந்தப் பயனும் இல்லை என்று எதிர்ப்பை பதிவு செய்தார்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை பேரணி என்பதால் தடையை தகர்க்க வேண்டும் என்ற முனைப்போடு வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை அருண் இருவரும் மேல்முறையீட்டுக்கான முயற்சிகளில் இறங்கினர். உடனடியாக மேல்முறையீட்டுக்கான ரிட் மனு தயாரிக்கப் பட்டது. தலைமை நீதிபதியிடம் அவசர விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர். பிரசாத் கேட்டுக் கொண்டார். தலைமை நீதிபதி கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, நீதிபதிகள் வி.தனபாலன், துரைசாமி ஆகியோரடங்கிய சிறப்பு அமர்வு அடுத்த நாள் சனிக்கிழமை காலை விசாரிக்க உத்தரவிட்டார். சனிக்கிழமை உயர்நீதிமன்றத்துக்கு விடுமுறை. விடுமுறை நாளில் சிறப்பு அமர்வு விசாரணை என்பது அபூர்வமாக முக்கிய வழக்குகளுக்கு மட்டுமே நடக்கும்.

கலைஞர் கருணாநிதி கைது, ஜெயலலிதா கைது, சங்கராச்சாரி கைது போன்ற வழக்குகளில் தான் இத்தகைய விடுமுறை நாள் சிறப்பு அமர்வு விசாரணை நடத்தியது. அதே போன்று பகுத்தறிவுப் பரப்புரை உரிமைக்காக திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்த வழக்கில் கழக வழக்கறிஞர்களின் தீவிர முயற்சியால் விடுமுறை நாள் சிறப்பு அமர்வு அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

நீதிபதி தனபால் இல்லத்தில் சனிக்கிழமை நடுப் பகல் விசாரணை தொடங்கியது. அரசு தரப்பில் தலைமை வழக்கறிஞர் ஏ.எல். சோமயாஜிலி, அரசு பிளீடர் அய்.எஸ். இன்பதுரை, சிறப்பு பிளீடர் வழக்கறிஞர் எஸ்.டி.எஸ். மூர்த்தி ஆகியோர் வாதிட்டனர்.

கழக சார்பில் மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர். பிரசாத் வாதிட்டார். வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை அருண் ஆகியோர் வழக்கிற்கு உதவினர். நீதிபதி சசீதரன், திங்கள் கிழமை வழக்கை தள்ளிப் போட்ட நிலையில் இந்த சிறப்பு அமர்வு விசாரணைக்குத் தேவை இல்லை என்றும், இந்த பேரணியை அனுமதித்தால் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு உருவாகலாம் என்றும் அரசு சார்பில் வாதிடப்பட்டது. கழக சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் பேரணிக்கான அனுமதி மறுப்பு அரசியல் சட்டப் பிரிவு 19(1)(ஏ) மற்றும் 51ஏ(எச்) பிரிவுகளுக்கு எதிரானது என்றும், இதேபோல் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிகள் கடந்த காலங்களில் நடத்தப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டியதோடு ஞாயிற்றுக் கிழமை திட்டமிடப்பட்டுள்ள பேரணிக்கு திங்கள்கிழமை வழக்கை தள்ளி வைத்ததையும் எதிர்த்தார்.

நீதிபதி சசீதரன் குறிப்பான ஆணை ஏதும் வழங்காமல் விசாரணையை தள்ளி வைத்ததை குறை கூறிய நீதிபதிகள் பேரணி

(4ஆம் பக்கம்)

# வினாக்கள்... விடைகள்...

+ திருநாவலூர் காவல் நிலைய போலீஸ்காரர் ரமேஷ் பாபு, தனக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளில் சேகுவேரா படத்தை ஒட்டி வைத்ததற்காக காவல் நிலைய ஆய்வாளரால் தண்டிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டார். **– செய்தி**

சேகுவேரா படத்துக்கு பதிலாக இவர் ஏதாவது கடவுள் படத்தை ஒட்டியிருந்தால் எந்த நடவடிக்கையும் வந்திருக்காது. அந்தக் கடவுள் படத்தை அகற்றச் சொன்ன ஆய்வாளர் மீது தான் நடவடிக்கை பாய்ந்திருக்கும். இதற்குப் பெயர்தான் மதச்சார்பற்ற நாடாம்!

+ சமூக சீர்திருத்தமும் அறிவியல் விழிப்புணர்வும் சமூகத்தில் நடந்தால் தான் மராட்டியத்தில் நிறைவேற்றப்பட்ட மூடநம்பிக்கைக்கு எதிரான சட்டம் வெற்றி பெற முடியும். **– 'இந்து' ஏடு தலையங்கம்**

மிக்க மகிழ்ச்சி. இதே கருத்தை தமிழ்நாட்டில் மூட நம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரங்களுக்கு அரசு தடை போடும்போது 'இந்து' ஏடு எழுதாமல் மவுனம் காப்பது தான் நமது பகுத்தறிவுக்கு புலப்படாமல் இருக்கிறது!

+ தமிழ்நாட்டில் கருத்துரிமைக்கு எதிரான அடக்கு முறைகளை எதிர்த்து குரல் கொடுக்க முன்வருமாறு அரசியல் கட்சிகளுக்கு டாக்டர் இராமதாசு கடிதம். **– செய்தி**

நீங்கள் உருவாக்கிய அனைத்து ஜாதி கூட்டமைப்பு, இதற்கெல்லாம் குரல் கொடுக்காதோ? அது சரி, ஜாதியமைப்புகள் எப்படி அடக்குமுறைகளுக்கு எதிராக போராட முடியும்?

+ நிலக்கரி சுரங்க ஊழல் தொடர்பாக காணாமல் போன 189 ஆவணங்களைத் தேடி கண்டுபிடிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. **– செய்தி**

இந்தக் குழுவும் காணாமல் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கய்யா!

+ உணவுப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்த சோனியா பசியை போக்க வந்த மணிமேகலை. **– கலைஞர் கருணாநிதி**

மணிமேகலை கையில் அள்ள அள்ளக் குறையாத 'அட்சயப் பாத்திரம்' இருந்தது! சோனியாவிடம் வெறும் 'கை' மட்டும் தானே இருக்கிறது! அதனாலென்ன? இப்போது அட்சயப் பாத்திரமெல்லாம் வேண்டாம். தேர்தலுக்கு 'கை' கைகொடுத்தாலே போதும் தானே!

+ 2002 கலவரத்தில் உடைக்கப்பட்ட 535 மசூதிகளை மீண்டும் அரசு செலவிலேயே குஜராத்தில் கட்டித்தர மோடி ஆட்சி உச்சநீதிமன்றத்தில் உறுதியளித்தது. **– செய்தி**

இடித்த மசூதிகளை கட்டித் தரலாம்; கலவரத்தில் கொல்லப்பட்ட உயிர்களை திருப்பித் தருவார்களா?

+ வகுப்பு மோதலற்ற இந்தியாவை உருவாக்க தேசிய நல்லிணக்க நீதிமன்றம் ஒன்றை அமைக்க வேண்டும். **– மாநிலங்களவையில் பா.ஜ.க. உறுப்பினர் ராம் ஜோய்ஸ்**

அந்த நீதிமன்றத்தின் முதல் தீர்ப்பு பா.ஜ.க.வை தடை செய்வதாக இருக்குமே! பரவாயில்லையா?

+ ரூபாய் மதிப்பு வீழ்ச்சியைத் தடுக்க கோயில்களில் உள்ள தங்கத்தை அரசு எடுப்பது 'தேச விரோதம்'! கடுமையாக எதிர்ப்போம். **– சுப்ரமணிய சாமி**

சரி; தங்கத்தை எடுக்க வேண்டாம். கடவுள்களிடம் முறையிட்டு பொருளாதார நெருக்கடியை உடனே நிறுத்தச் சொல்லுங்கள்.

+ வேளாங்கன்னி ஆரோக்கிய மாதா ஆலயத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்த வரும் பக்தர்கள், சுகாதார சீர்கேட்டில் சிக்கி, நோயாளிகளாக திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. **– 'தினமலர்' செய்தி**

ஆரோக்கிய மாதா அப்படித்தான் சோதிப்பாள். அதற்கெல்லாம் கலங்கக் கூடாது.


+ இலங்கையில் நிலைமைகளை நேரில் பார்வையிட வந்த ஐ.நா. மனித ஆணையத் தலைவர் நவநீதம் பிள்ளையை திருமணம் செய்துக் கொள்ளத் தயாராக இருப்பதாக சிங்கள அமைச்சர் பேச்சு. **– செய்தி**

ஐ.நா. மனித உரிமைக் குழுவை அனுப்புவதைவிட ஐ.நா.வின் மனநல மருத்துவர்கள் குழு ஒன்றை அவசரமாக இலங்கைக்கு அனுப்ப வேண்டும். இராஜபக்சேவின் அமைச்சர்களுக்கு அவசர சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது!

# நாத்திகர் விழாக் காட்சிகள்

















படங்கள்: கோகுல கண்ணன், செல்லையா முத்துசாமி

DATE OF PUBLICATION 04.09.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள கோயிலில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைப் பயன்படுத்தக் கோரி செப். 13 இல் கழகம் ஆர்ப்பாட்டம்

திராவிடர் விடுதலைக் கழக தலைமை செயற்குழுக் கூட்டம், செப். 2 ஆம் தேதி பகல் 11 மணியளவில் சென்னை பத்திரிகையாளர் சங்க கருத்தரங்க மண்டபத்தில் செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி தலைமையில் கூடியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் ரத்தினசாமி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கழகத்தின் அடுத்த செயல் திட்டங்கள், பரப்புரைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது.

மராட்டியத்தில் மத வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பகுத்தறிவுப் போராளி தபோல்கர் வீரமரணத்துக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்னை மண்டல திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய நாத்திகர் விழா, மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிக்கு காவல்துறை தடைவிதித்த நிலையில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தெளிவான தீர்ப்பு கிடைக்காத நிலையில் அதே நாளில் மேல் முறையீடு செய்து விடுமுறை நாள் சிறப்பு நீதிமன்ற விசாரணைக்கான முயற்சிகளில் இறங்கி அதில் வெற்றி பெற்று தீர்ப்பின் வழியாக பகுத்தறிவுப் பரப்புரை பேரணிக்கு சட்டம் வழங்கிய உரிமையை நிலைநாட்டி, திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு பெருமைச் சேர்த்த மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர். பிரசாத் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆர். திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோரை பாராட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது.

## தலைமை செயற்குழு முடிவுகள்

நவம்பர், டிசம்பர் மாதம் முழுதும் கிராமப் பரப்புரை இயக்கங்களை நடத்த முடிவெடுக்கப்பட்டது. நவம்பர் 15 இல் தொடங்கி டிசம்பர் முதல் தேதி வரை சேலம் (மேற்கு) மாவட்டத்திலும், நவம்பர் 1 ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரை திருவாரூர் மாவட்டத்திலும், டிசம்பர் முதல் 15 நாட்கள் ஈரோடு வடக்கு மாவட்டத்திலும் இரண்டாவது 15 நாட்கள் தெற்கு மாவட்டத்திலும், செப்டம்பர் 17 தொடங்கி 25 வரை திண்டுக்கல் மாவட்டத்திலும் கிராமம் கிராமமாக பரப்புரை இயக்கங்களை நடத்த முடிவு செய்யப்பட்டது. கீழ்க்கண்ட கோரிக்கைகள் பரப்புரையில் முன் வைத்து விளக்கப்பட வேண்டிய கருத்துகளாக வரையறுக்கப்பட்டது.

- ஜாதி மறுப்பு திருமணங்களை அச்சுறுத்தி, மிரட்டி தடுக்கும் ஜாதி பஞ்சாயத்துகள் அதில் பங்கேற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கூடிய தனிச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வரவேண்டும்.
- மகாராஷ்டிரா மாநில அரசு கொண்டு வந்ததைப் போல் தமிழக அரசு மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.
- தனியார் துறையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருக்கு தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டும்.
- ஜாதி மறுப்பு திருமணம் புரிந்தோருக்காக ஜாதியற்றோர் பட்டியலை உருவாக்கி, அவர்களின் வாரிசுகளுக்கு தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டும்.
- நாட்டின் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்க பன்னாட்டு நிறுவனங்கள் பெரு முதலாளிகளுக்கான வரிச் சலுகைகளை ரத்து செய்வதோடு, கோயிலுக்குள் முடங்கிக் கிடக்கும் தங்கத்தையும் பயன்படுத்த வேண்டும்.

- என்ற கோரிக்கைகளை முன் வைத்து பரப்புரை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

செப்டம்பர் 13 ஆம் நாள் கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க பயன்படுத்திட வலியுறுத்தி மாவட்ட தலைநகரங்களில் கழக சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தும் உரிமையை ஏற்றுக் கொண்டனர். சென்னையில் பேரணிகள் நடத்துவதற்கு எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கிலிருந்து லேங்க்ஸ் கார்டன் சாலை வரை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது என்ற அரசு தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், பேரணியை இந்தப் பாதையில் நடத்துவதற்கு அனுமதித்தனர். காவல்துறையின் உயர் அதிகாரிகள் அனைவரும் சிறப்பு விசாரணைக்கு வந்தனர். பேரணியைத் தடுத்திட காவல்துறை மேற்கொண்ட தீவிர முயற்சிகள் முறியடிக்கப்பட்ட நிலையில் பொதுக் கூட்டம் நடைபெறாமல் தடுக்கும் முயற்சிகளில் காவல்துறை இறங்கியது. பேரணிக்கு நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு அனுமதி வழங்கியுள்ள நிலையில் பொதுக் கூட்டத்தை தடை செய்வதில் நெருக்கடிக்குள்ளான காவல்துறை, பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தை வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என்ற பிரச்சினைகளை எழுப்பி, கழகத் தோழர்களை கடுமையான இழுத்தடிப்புக்கு உள்ளாக்கியது. கடைசியில், பொதுக் கூட்டம் திட்டமிடப்பட்டிருந்த வி.எம். சாலையிலேயே நடத்துவதற்கு அனுமதி வழங்கினர்.

காவல்துறையின் தடை முயற்சிகள் கழகத்தின் பேரணிக்கு கூடுதல் விளம்பரத்தையும் முக்கியத்துவத்தையும் உருவாக்கியதோடு பேரணி, பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடப்பதற்கும் காரணமாயிற்று.

சிறப்பு அமர்வு விசாரணை வரை இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்வதற்கு காரணமான கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை அருண் ஆகியோருக்கு பொதுக் கூட்ட மேடையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஆடை போர்த்தி, கழக வெளியீடான ‘குடிஅரசு’ தொகுப்புகளை பரிசாக பலத்த கரவொலிக்கிடையே வழங்கினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சரியாக 10 மணி யளவில் நிகழ்ச்சி நிறைவடைந்தது. மாநாடு போல் மக்கள் திரண்டிருந்தனர்.

**சுவரெழுத்து :** நாத்திகர் விழாவையொட்டி சென்னை முழுதும் சுவரெழுத்துகள் எழுதப்பட்டிருந்தன. கழகச் செயல்வீரர்கள் வேலு, அய்யனார், இருதயராஜ், வசந்த்குமார், மனோகர், கோவிந்தன், வீரா, செந்தில், நந்தா, ஆ.தமிழ்ச்செல்வன் ஆகியோரடங்கிய குழு, சுவரெழுத்து விளம்பரங்களைச் செய்தது.

கழகத் தோழர்கள் ஏசுகுமார், தட்சிணாமூர்த்தி, அருண் குமார், சித்தார்த்தன், குமரேசன், தமிழ்ச்செல்வி, இலட்சுமணன், தாமரைக்கண்ணன், மனோஜ்குமார், குபேந்திரன், பிரகாசு, செல்லகுமார் ஆகியோரடங்கிய குழு தொடர்ந்து 10 நாட்கள் மாலை தோறும் கடை கடையாக சென்று துண்டறிக்கைகளை வழங்கி நிதி வசூல் செய்தது.

தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், மாவட்ட பொருளாளர் வேழவேந்தன், மாவட்ட தலைவர் ஜான்சன், சுனில் குமார், ஆட்டோ சரவணன், அய்யனார் ஆகியோரடங்கிய குழு, நீதிமன்றம் சென்று வழக்குத் தொடர்பான பணிகளை செய்தது.

மாவட்ட கழகச் செயலாளர் உமாபதி, அனைத்து குழுக்களின் பணிகளையும் ஒருங் கிணைத்து செயல்பட்டார். ஒரு மாத காலம் தோழர்களின் இடைவிடாத உழைப்பு, பேரணி, பொதுக் கூட்டத்துக்கு பெரும் வெற்றியை ஈட்டித் தந்தது.

**– நமது செய்தியாளர்**

## செங்கொடி நினைவு நாளில் மரணதண்டனைக்கு எதிராக கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம்

தோழர் செங்கொடி நினைவு நாளான ஆகஸ்டு 28 அன்று தூக்குத் தண்டனையை நீக்கக் கோரி கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் வெள்ளமடை நாகராசன் தலைமை தாங்கினார். மாவட்ட காப்பாளர் மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன், மாநகர தலைவர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தனர்.


கழகப் பொறுப்பாளர்கள் து. ஜெய்ந்த் கிருஷ்ணன், பாலமுரளி, ஆன்ட்ரூஸ், நாகராஜ், பிரதாப், சிலம்பரசன், நேரு தாஸ், பிரசன்னா, சதீஸ், இராஜாமணி, இரத்னபுரி சதீஸ், விக்கி, மகேசு, பிரசாந்த், திருப்பூர் அகிலன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## சாக்கடைக் குழிக்குள் சாவு: கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

மயிலாப்பூரில் பல்லக்கு மாநகரை சேர்ந்தவர் ஜனார்த் (மாநகராட்சி ஊழியர்). இவர் 27.8.2013 அன்று காலை 10.30 மணியளவில் மயிலாப்பூரில் சாய்பாபா கோவில் அருகே உள்ள சாக்கடைக்குள் இறங்கி அடைப்பு எடுக்கும்போது விஷவாயு தாக்கி உயிர் இழந்தார். “மனிதனை மரணக் குழிக்குள் தள்ளும் இந்த இழி தொழிலை நிறுத்த வேண்டும்; எந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்” என்று மாநகராட்சியை வலியுறுத்தி 28.8.2013 அன்று காலை 10.30 மணிக்கு நாகேசுவரராவ் பூங்கா அருகில் ஆர்ப்பாட்டம், திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பா.ஜான் (மாவட்டகழகத் தலைவர்) தலைமையில் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் மயிலைப் பகுதி செயலாளர் மாரிமுத்து, அமைப்பாளர் மனோகரன், திருவல்லிக்கேணி செயலாளர் அருண்குமார், அமைப்பாளர் செந்தில் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோழர்களை காவல்துறை கைது செய்து, அருகிலுள்ள சமூகநலக் கூடத்தில் வைத்தது. பின்னர் மாலை 4 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 5th September 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | செப்டம்பர் 12, 2013 | புரட்சி 12 | முழக்கம் 35 | விலை: ரூ.3.00


## பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க

# கோயில் தங்கத்தைப் பயன்படுத்துக!

## செப்.13 இல் கழகம் தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம்

திவாலாகிக் கொண்டிருக்கும் இந்தியாவின் பொருளாதார சீர்கேடுகளைக் கண்டித்தும் கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை ரிசர்வ் வங்கி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வலியுறுத்தியும் திராவிடர் விடுதலைக் கழகம் மாவட்ட தலைநகர்களில் ஆர்ப்பாட்டங்களை செப்.13 ஆம் தேதி நடத்துகிறது. இது குறித்து கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

நோயைப் பரப்பியவர்களே, இப்போது நோய்க்கு சிகிச்சை தேடுகிறார்கள்!

உலகமயமாக்கல் - புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டு வந்தது யார்? நாட்டின் பொருளாதாரத்தை சர்வதேச நாடுகளின் நிலைக்கு உயர்த்தப் போகிறோம் என்று ‘டமாரம்’ அடித்தது யார்? காங்கிரஸ் ஆட்சிதான். ஆமாம்; ஆமாம்; நாங்களும் அதைத்தான் ஆதரிக்கிறோம் என்று பின் தொடர்ந்ததும் பா.ஜ.க. ஆட்சிதான்!

**என்ன நடந்தது?**

- உள்நாட்டு தொழில் வளர்ச்சி முடங்கியது.
- விவசாயம் நசிந்துப் போனது.
- பெட்ரோல், டீசல் விலை - வாரந்தோறும் ராக்கெட் வேகத்தில் எகிறுகிறது.
- அரசுத் துறை நிறுவனங்கள் நலிந்தன. அடிமாட்டு விலைக்கு பங்குகள் விற்கப்படுகின்றன.
- மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, மருத்துவச் சேவைகளை ஆட்சியாளர்கள் கைவிட்டனர்; தனியார் சுரண்டலுக்கு வழி விட்டனர்.
- உலக வங்கியும் - சர்வதேச நிதியமும் கட்டளை போடுகின்றன; மக்கள் வாக்குகளைப் பெற்ற ஆட்சியாளர்கள் ‘சலாம்’ போடுகிறார்கள்.

மக்களுக்கான வாழ்வுரிமைகளுக்கு நெருக்கடி; பனியா-பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டுகின்றன; இதற்குப் பின்னணியாக ஆட்சியாளர்களின் ‘மூளை’யாக இயங்கும் சக்திகள் எவை?


நீண்டகால பாரம்பரியம் கொண்ட டாட்டா நிறுவனத்தின் அதிபர் ரத்தன் டாட்டா குட்டை உடைக்கிறார்.

“அரசு பல பொருளாதாரக் கொள்கைகளை அறிவிக்கிறது. அந்தக் கொள்கைகளை தனியார் நிறுவனத்தினர் தங்கள் சுயநலனுக்கு ஏற்ப மாற்றிக் கொள்கிறார்கள்; அல்லது அந்தக் கொள்கைகளையே நடைமுறைக்கு வராமல் தடுத்து விடுகிறார்கள். இந்தச் சக்திகளின் பிடிகளில் சிக்கிக் கொண்டுவிட்ட அரசு, தான் அறிவித்த கொள்கைகளையே பின் வாங்கிக் கொள்கிறது. இதுவே பிரச்சனைக்குக் காரணம்.” - ரத்தன் டாட்டா (‘தினமணி’-29.8.2013)

அரசின் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவது யார்? அதிகார வர்க்கம் தான்! இந்த அதிகாரக் கும்பல் பன்னாட்டு நிறுவனங்களுக்காக கொள்கைகளை மடைமாற்றி விடுகிறது என்றும் - அந்த அதிகார சக்திகளின் பிடியில் ஆட்சியும் சிக்கிக் கொண்டிருக்கிறது என்றும் டாட்டா கூறுகிறார்.

இந்த அதிகாரச் சக்திகள் யார்? ரிசர்வ் வங்கி ஆளுநர்கள் - பங்கு முதலீட்டு வாரியத் தலைவர்கள் - பொருளாதார ஆலோசனை வழங்கும் அதிகாரிகள் - நிதித் துறை ஆலோசகர்கள் - சர்வதேச நிதி நிறுவனங்களுக்கான பிரதிநிதிகள் - இப்படி நாட்டின் அதிகார மையங் களில் ஆதிக்கம் செய்துவரும் பார்ப்பன அதிகார வர்க்கம் தான்! இந்தப் பார்ப்பன அதிகார சக்திகள் தான் இப்போதும்கூட நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு டீசல் விலையை மிக அதிகமாக உயர்த்த வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார்கள்; அந்நிய முதலீடுகளை அதிகரிக்க எதையாவது செய்தாக வேண்டும் என்கிறார்கள்.

(4ஆம் பக்கம்)



## செப். 17 – தமிழினத்தின் மான மீட்பு நாள்!

• நாடாளுமன்றத்துக்கே போகாமல் அரசியல் சட்டத்தை முதன்முதலாக திருத்த வைத்து, கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீடு உரிமையைப் பெற்றுத் தந்த தலைவர் – **பெரியார்**

• 10 வயது பார்ப்பன சிறுவன் - 60 வயது, 70 வயது பார்ப்பனரல்லாத மக்களை ‘அவன்’, ‘இவன்’, ‘அவள்-இவள்’ என்று நாக் கூசாமல் அழைத்து வந்த அவமானத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர் – **பெரியார்**

- தமிழ்நாட்டில் ஜாதி சங்கத் தலைவர்கள்கூட பெயருக்குப் பின்னால் ஜாதிப் பட்டம் போடுவதில்லை. வேறு மாநிலங்களில் ஜாதி ஒழிப்புப் பேசும் புரட்சி இயக்கங்களின் தலைவர்கள் பெயரில் இன்னும் ஜாதி ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது. பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரைப் போடுவதையே வழக்கமாக்கியிருந்த தமிழகத்தில் ஜாதிப் பெயரை வெட்டி எறிய வைத்தது – **பெரியார்**
- பார்ப்பான் மந்திரம் ஓதி, பார்ப்பனரல்லாத மக்களை இழிவுபடுத்தி வந்த புரோகித திருமணத்துக்கு மாற்றாக சுயமரியாதைத் திருமணத்தை அறிமுகப்படுத்தி அதை சட்டமாக்கச் செய்தவர் – **பெரியார்**
- தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு எழுத்து சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியவர் – **பெரியார்**
- வடமாநிலங்களைப் போல் மதவெறி சக்திகள் காலூன்றி வேர்பிடித்து வளர முடியாத மாநிலமாக தமிழகத்தைப் பக்குவப்படுத்திய தலைவர் – **பெரியார்**
- ஜாதி-மத-கடவுள் எதிர்ப்பாளர்களை ஒரே இயக்கமாக்கி சமூகப் புரட்சிக்கு வழி நடத்திய தலைவர்– **பெரியார்**
- கடவுள் மறுப்பு இயக்கத்தை மக்கள் இயக்கமாக்கிய ஒரே தலைவர் – **பெரியார்**
- ஆண்களுக்குள்ள உரிமை, அத்தனையும் பெண்களுக்கும் உண்டு என்று வலியுறுத்தி பெண் கல்வியின் அவசியத்தை கிராமத்து வாழ் மக்கள் வரை ஏற்கச் செய்த புரட்சிக்கு வித்திட்டவர்– **பெரியார்**
- ஜாதி ஒழிப்புக்காக அரசியல் சட்டத்தையே எரிக்கும் போராட்டத்தை நடத்தி, 10 ஆயிரம் தோழர்களை எரிக்கச் செய்த தலைவர் - இந்தியை எதிர்க்க தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை அறிவித்த புரட்சியாளர் – **பெரியார்**
- வரலாறு முழுதும் பார்ப்பனக் கொடுமைகளை எதிர்த்தவர்கள் அழிக்கப் பட்டார்கள்; சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டார்கள்; சுட்டுக் கொல்லப் பட்டார்கள். ஆனால், பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடக்குமுறைக்கு எதிராக சிங்கமாக சிலிர்த்து எழுந்து, களமாடி பார்ப்பன சூழ்ச்சிப் பொறிக்குள் சிக்கிடாமல் வெற்றிப் பாதை அமைத்திட்ட ஒரே வரலாற்றுத் தலைவர் – **பெரியார், பெரியார் மட்டுமே.**

ஜாதி அடிமைகளின் வரலாற்றில் உரிமைப் போரைத் தொடங்கி

சமூகப் புரட்சிக்கு அணி திரட்டிய

எங்கள் லட்சிய ஒளி விளக்கே...

இதோ, அதே பாதையில் ஆயிரமாயிரமாய் – இளைஞர்கள்... முழக்கமிட்டு வருகிறோம்.




**வாசகர்களுக்கும்**
**கழகத் தோழர்களுக்கும்**
# பெரியார் பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

தலையங்கம்

## ரிசர்வ் வங்கி கடிதமும் பார்ப்பன அலறலும்!

கேரளத்திலுள்ள குருவாயூர் கிருஷ்ணன், பத்மநாபசாமி உள்ளிட்ட கோயில்களில் ஏராளமான தங்கம் முடங்கிக் கிடக்கிறது. நாட்டின் அன்னிய செலாவணிக்கு பதிலாக தங்கத்தின் கையிருப்பைக் காட்டினால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீறும் வாய்ப்புகள் உண்டு என்ற நிலையில் கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை ரிசர்வ் வங்கியின் கணக்கில் கொண்டு வர முடியும். அந்தத் தங்கத்தை ஒரு சில வருடங்களில் மீண்டும் கோயிலுக்கு எடுத்துக் கொள்ளவும் முடியும். ஆனாலும், நாட்டின் பொருளாதாரத்தைவிட கோயில்களில் 'கடவுள்களிடம்' முடங்கிக் கிடக்கும் தங்கத்தில் கை வைக்கக் கூடாது என்று பார்ப்பன சக்திகள் அலறுகின்றன.

அண்மையில் இந்தியன் ரிசர்வ் வங்கி கேரளாவிலுள்ள கோயில்களில் தங்கத்தின் இருப்பு குறித்த விவரத்தைக் கேட்டு கடிதம் எழுதியது. உடனே பார்ப்பன அமைப்புகள் அலறத் தொடங்கிவிட்டன. ஒரு கடிதம் எழுதி விவரங்களைக் கேட்கும் உரிமைகூட இல்லை என்கிறார்கள். கடிதத்துக்கு பதிலே எழுதக் கூடாது என்று குருவாயூர் கிருஷ்ணன் கோயில் நிர்வாகத்தை சில இந்து அமைப்புகள் வலியுறுத்தியுள்ளதாம். திருவாங்கூர் தேவஸ்தானமும், ரிசர்வ் வங்கி கடிதம் அனுப்பியது உண்மைதான் என்றும், அது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளது.

தங்கத்தின் இருப்புக் குறித்து அறிந்து கொள்ளவே கடிதம் எழுதப்பட்டது என்றும், கோயில்களிலுள்ள தங்கத்தை வாங்கும் எந்தத் திட்டமும் இல்லை என்றும் ரிசர்வ் வங்கி செய்தி தொடர்பாளர் அல்பான சிவாலா கூறியுள்ளார். அறநிலையத் துறை, தேவஸ்வம் போர்டு என்ற அமைப்புகள் அரசின் கட்டுப் பாட்டுக்கு உட்பட்டவை. அரசு நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் தங்கத்தின் இருப்பு எவ்வளவு என்பதை அறிந்து கொள்ளும் உரிமைகூட நிதித் துறையை நிர்வகிக்கும் ரிசர்வ் வங்கிக்குக் கிடையாது என்று பார்ப்பனர்கள் 'இந்து' மதம் என்ற போர்வைக்குள் பதுங்கிக் கொண்டு மிரட்டுவது பார்ப்பன ஆதிக்கத்தின் வெளிப்பாட்டையே உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவிலேயே முதல்முறையாக கோயில் சொத்துகளை அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது பனகல் அரசர் தலைமையில் நடந்த நீதிக்கட்சி ஆட்சியில்தான். அது வரை கோயில்களின் நகைகள் பார்ப்பன அர்ச்சகர்களின் வீட்டுப் பொருளாகவே இருந்தன. இதை கேள்வி கேட்டாலே 'கடவுள் குற்றம்' என்று அச்சுறுத்தி வந்தார்கள். அர்ச்சர்கள் மட்டுமின்றி கோயில்களுக்கு 'ஆலோசகர்கள்', 'வழக்கறிஞர்கள்' என்று பார்ப்பனர்கள் தங்களை நியமித்துக் காண்டு, கோயில் பணத்தையும், சொத்தையும் கொள்ளையடித்து வந்தனர். இந்த கொள்ளைகளைத் தடுத்து, கோயில் சொத்து, நகைகளின் கணக்குகளை முறைப்படுத்தி, அரசு கண்காணிப்பின் கீழ் கொண்டு வர 'இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதா'வை கொண்டு வந்தபோது, 'இந்து', 'சுதேசமித்திரன்' போன்ற பார்ப்பன ஏடுகள், கடுமையாகக் கண்டித்து எழுதியதோடு, அன்று 'தேசிய'த் தலைவராக வலம் வந்த சத்தியமூர்த்தி அய்யர், நீதிக்கட்சியினர், "மதத்தையே அழிக்க முனைந்து விட்டார்கள். ஆண்டவனையே சட்டம் போட்டுக் கட்டுப்படுத்தும் அடாத செயலை எவருமே ஆதரிக்க மாட்டார்கள்" என்று சட்டசபையில் பேசினார். நீதிக்கட்சியின் முதல் ஆட்சியில் (1920-23) கொண்டு வரப்பட்ட இந்த மசோதா நிறைவேற்றப்பட முடியாமல் இரண்டாவது அமைச்சரவையில் தான் (1923-26) நிறைவேற்ற முடிந்தது. அப்போது காங்கிரசில் இருந்தாலும் பெரியார், நீதிக்கட்சியின் இந்த மசோதாவை அழுத்தமாக ஆதரித்துப் பேசினார்.

பார்ப்பனர் சொந்த சொத்தாக இருந்த கோயில் நகைகளும், சொத்துக்களும் அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கே அவ்வளவு எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியிருந்தது. இப்போது, அரசு கட்டுப்பாட்டில் கோயில் நிர்வாகம் கொண்டுவரப்பட்ட பிறகும்கூட 'கோயில் நகைகளில் கை வைக்க பார்ப்பனர்கள் எதிர்ப்பு 'சத்தியமூர்த்தி அய்யர்களின்' குரலைத்தான் நினைவு படுத்துகிறது. தில்லை நடராசன் கோயில் தீட்சதர்களின் நிர்வாகத்தில் இருந்தபோது கோயில் நகைகளை தீட்சதப் பார்ப்பனர்களே திருடிக் கொண்டு போய் அவர்களுக்குள்ளே பங்கு போடுவதில் தகராறு ஏற்பட்டு, அடிதடி மோதலாகி நீதிமன்றம் வரை வழக்குகள் வந்ததையும் குறிப்பிட வேண்டும்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு நாட்டின் பொருளாதாரத்தை அடகு வைத்த பா.ஜ.க., காங்கிரஸ் ஆட்சியினர் எப்படி மக்கள் விரோதிகளாக தங்களை அடையாளம் காட்டிக் கொள் கிறார்களோ, அதேபோல், மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, கடவுள் நகைகளை எடுக்கக் கூடாது என்று கூக்குரல் போடும் பார்ப்பன சக்திகளும் மக்கள் விரோதிகள் தான்.

கோயில் நகைகளை பொருளாதார நெருக்கடிக்குப் பயன்படுத்தும் 'துணிவு' ரிசர்வ் வங்கிக்கு இருக்கும் என்று நாம் நம்பத் தயாராக இல்லை. ஆனால், கோயிலும் கடவுளும் பார்ப்பன அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்ளும் நிறுவனங்களே என்று பெரியார் சுட்டிக் காட்டிய கருத்தின் நியாயம் இப்போது புரிகிறது அல்லவா?

# 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தலையங்கம்

## மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரவேண்டும்

*'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு எழுதியுள்ள தலையங்கத்தின் தமிழாக்கம்:*

பகுத்தறிவு கொள்கைகளுக்காக மூட நம்பிக்கை ஒழிப்பு இயக்கம் நடத்திய நரேந்திர தபோல்கர், மதத் தீவிரவாதி களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அடுத்த இரண்டு வாரங் களுக்குள்ளேயே அசாம் மாநிலத்தில் கோகிராஜ்கர் மாவட்டத்திலுள்ள ஒரு குக்கிராமத்தில் அக்கிராம மக்கள் பேய், பில்லி சூன்யம் வைத்ததாக சந்தேகித்து இரண்டு பேரை கொலை செய்து விட்டனர். தபோல்கர் சுட்டுக் கொல்லப் பட்டதால், மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வரும் கட்டா யத்துக்கு மகாராஷ்டிர அரசு உள்ளானது. அதுபோலவே அசாம் முதல்வர் தருண் கோகோயும் பேய்-பில்லி சூன்யத்தை குற்றமாக்கும் சட்டத்தைக் கொண்டுவரப் போவதாக உறுதியளித்துள்ளார்.

ஆனாலும், இதுபோன்ற குற்றம் அசாம் மாநிலத்தில் மட்டும் நிகழவில்லை. சமு தாயத்தில் பரவியுள்ள இந்த மூடநம்பிக்கை நோயை ஒழிக்க, மாநில அரசுகளுடன் ஆலோசித்து மத்திய அரசே, ஒரு மாதிரி சட்டத்தை தயாரிக்க வேண்டும். 'பேய் பில்லி சூன்யம்' வைத்தவர்கள் என்று முத்திரை குத்தி, 2008 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளில் 17 மாநிலங்களில் 768 பெண்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மனநிலை பாதிப்புற்ற அல்லது உடல் வளர்ச்சி குன்றியவர்களை அறியாமையில் மூழ்கியுள்ள கிராம மக்கள், 'பில்லி சூன்யம்' வைத்து அழிக்கப் பார்க்கிறார்கள் என்ற சந்தேகத்தில் இத்தகைய கொலைக் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். குடும்பத்தில் உள்ளவர்களேகூட கிராம மக்களுடன் சேர்ந்து சதி செய்து குடும்ப உறுப்பினர் களை கொலை செய்து விடுகிறார்கள். ஹார்மோன் மாற்றம், உளவியல் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டு வழமைக்கு மாறாக நடந்து கொள்ளும் பெண்களை குடும்ப உறுப்பினர்களே 'பேய்-பில்லி சூன்யக்காரர்களாக' சித்தரித்து விடு கிறார்கள் டெல்லியில் உள்ள சமூக ஆய்வு மய்யம் இந்த உண்மைகளை வெளிப் படுத்தியுள்ளது.

சில மாநிலங்களில் 'பேய்-பில்லி சூன்யம்' என்ற நம்பிக்கைகள் சட்ட பூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளன என்றாலும் கூட, அந்தச் சட்டங்களை அமுல்படுத்த முடியவில்லை. காரணம் மக்களிடையே காலம் காலமாக ஊறிப் போயுள்ள நம்பிக்கைகள் பழமையான சிந்தனைகள், பழக்க வழக்கங்கள் தான். எந்த ஒரு பெண் மீதும் 'பேய்-பில்லி சூன்யக்காரி' என்று முத்திரைக் குத்துவதை தண்டனைக்குரிய குற்றம் என்று ராஜஸ்தான் மாநிலத்தில் சட்டம் இருக்கிறது. ஆனால், அது காகித அளவிலே முடங்கிவிட்டது. 2001 ஆம் ஆண்டிலிருந்து ஜார்க்கண்ட் மாநிலத்திலும் பில்லி சூன்யம் தடைச் சட்டம் அமுலில் உள்ளது. ஆனால், சட்டம் குற்றங்களைக் குறைப்பதில் தோல்வி அடைந்துவிட்டது.

கடந்த ஆண்டு, ஒரிசா உயர்நீதி மன்றமும், பில்லி சூன்யத்தைக் குற்ற மாக்கும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று மாநில அரசுக்கு அறிவுறுத்தியது. இந்த நிலையில் மத்திய அரசே இப்படி ஒரு சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியமிருக்கிறது. அப்படி சட்டம் கொண்டு வந்தால் மட்டும் போதாது. தபோல்கர் விரும்பியதைப் போல இந்த மூடநம்பிக்கைகளுக்கு எதிரான விழிப்புணர்வு இயக்கம் மக்களி டம் நடத்தப்பட வேண்டும். அதற்கு ஆட்சியும் ஆதரவு காட்ட வேண்டும். அப்போது தான் எட்டாம் நூற்றாண்டு களில் தொடங்கிய இந்த மூடப் பழக்கத் திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்!

– 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தலையங்கம்
(செப். 6, 2013)

## இந்து அறநிலையத் துறையின் அடாவடி உத்தரவு

தமிழக அரசின் இந்து அறநிலையத் துறை அனைத்து கோயில் செயல் அலுவலர்களுக்கும் ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளதாம். அதன்படி இனி வரும் காலங்களில் கோயிலுக்கு சொந்தமான திருமண மண்டபங்கள், கோயிலை சுற்றி யுள்ள வளாகத்தில் நாத்திகர்களுக்கும், இந்து சமய வளர்ச்சிக்கு தொடர்பில்லாத கொள்கை உடையவர்களுக்கும் இடம் அளிக்கக் கூடாது என்றும், மது, மாமிசம் பயன்படுத்தும் கூட்டங்களுக்கும் இது பொருந்தும் என்றும், கோயில் மண்ட பங்கள், பக்தி தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அந்த உத்தரவு கூறுகிறதாம்.

வேதத்தை எதிர்ப்பவர்கள்தான் நாத்தி கர்களே தவிர, கடவுளை எதிர்ப்பவர்கள் அல்ல என்று கூறியிருக்கிறார், இறந்து போன மூத்த காஞ்சி சங்கராச்சாரி. சார் வாகம், சமணம் என்கிற கடவுள் மறுப்பு சிந்தனைகளும் இந்து மரபில் இருந்திருக் கிறது. வேதத்தை யும் வடமொழியையும் மறுத்த மறைமலையடிகள் போன்ற சைவர்களும் சங்கராச்சாரி கூற்றுப்படி நாத்திகர்கள் தான்.

அதேபோல் 'இந்து'க்களில் பெரும் பாலோர் மாமிசம் சாப்பிடுகிறவர்கள். பல கிராமக் கோயில்களில் பூஜைகளே ஆடு, கிடா வெட்டித்தான் நடக்கிறது. இவர் களுக்கு கோயில் திருமண மண்டபங் களைப் பயன்படுத்தும் உரிமையை மறுப்பதுதான். இந்து அறநிலையத் துறையின் வேலையா? இவர்களை இந்துவாக அறநிலையத் துறை அங்கீகரிக்கவில்லையா? இந்து மதத்தின் பெயரைக் கூறிக் கொண்டு, 'பார்ப்பனிய மதத்தின்' கொள்கைகளைத் திணிக்க அற நிலையத் துறை முயலுகிறது. தமிழகத்தில் நடக்கும் பார்ப்பன ஆட்சியில் அற நிலையத் துறை பார்ப்பனிய பாதையில் தொடர்ந்து செயல்படுவது வன்மையான கண்டனத்துக்குரியது.

### மூட நம்பிக்கை ஒழிப்பு சட்டத்தில் கைது

பகுத்தறிவுப் போராளி தபோல்கர் நினைவாக மகாராஷ்டிர அரசு பிறப்பித்துள்ள மூடநம்பிக்கை ஒழிப்பு அவசர சட்டத்தின் கீழ் நான்டிட் மாவட்டத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். சயங்கான் லியாகத் கான் (25), அமிருதின் அப்துல் லத்தீப் (40) இருவரும் எய்ட்ஸ், புற்று நோயை மாந்திரீகத்தால் குணப்படுத்துவதாக சிகிச்சை மய்யங்களை நடத்தி, மக்களை ஏமாற்றி வந்தனர். புதிய சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதால் இவர்கள் பிணையில் எளிதாக வெளி வருவது தடுக்கப்பட்டுள்ளது.

# வினாக்கள்... விடைகள்...

✦ பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள, டீசல் விலையை கடுமையாக உயர்த்தி எண்ணெய் நிறு வனங்களின் வருவாய் இழப்பை குறைக்க வேண்டும்.

**– பிரதமரின் பொருளாதார ஆலோசகர் சி. ரெங்கராஜன்**

*எண்ணெய் நிறுவனங்கள் நெருக்கடியிலிருந்து மீண்டுவிடும். ஆனால், எண்ணெயைப் பயன்படுத்த மக்கள் தான் இருக்க மாட்டார்கள். அதனாலென்ன? பொருளாதாரம், முக்கியம் பிரதமரே!*

✦ நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு கோப்புகள் திருடப் பட்டுள்ளன. இது தொடர்பாக எப்போது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப் போகிறீர்கள்?

**– சுஷ்மா சுவராஜ் கேள்வி!**

*முதல் தகவல் அறிக்கையும் காணாமல் போகும் என்பது உறுதியானால், இப்போதே தாக்கல் செய்ய தயார்!*

✦ 7 வயதில் பள்ளிப் படிப்பையும் 13 வயதிலேயே பட்டப் படிப்பையும் முடித்து சாதனைப் புரிந்த உ.பி. மாநில சிறுமி சுஷ்மா வர்மா மேல் படிப்புக்கு உதவிட பல்கலைக் கழகங்கள் போட்டிப் போட்டு ஆர்வம்.

**– செய்தி**

*... ப்பூ ... இது ஒரு சாதனையா? எங்க ஊருல திருஞானசம்பந்தன் குழந்தையாக பிறந்தவுடனேயே 'பதிகம்' பாடியவன், தெரியுமோ?*

✦ ரிசர்வ் வங்கி கொள்கைகளை உருவாக்குதில் வெளிப் படையான அணுகுமுறை வேண்டும்.

**– புதிய கவர்னர் ரகுராம் ராஜன்**

*.... அப்ப இதுவரை ரிசர்வ் வங்கி வெளிப் படையாக செயல்படவில்லைன்னு சொல்ல வர்றீங்க... அப்படித் தானே!*

✦ தமிழ்நாடு முழுதும் உள்ள கோயில்களில் மாற்று மின் சக்தியான சூரிய மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

**– அறநிலையத் துறை அமைச்சர் தனபால்**

*மாற்று மின் சக்தியை ஆகமம் ஏற்றுக் கொள்ளும். ஆனால், பார்ப்பன அர்ச்சகருக்கு பதிலாக மாற்று ஜாதி அர்ச்சகரை மட்டும் ஆகமம் ஏற்காது; அப்படித்தானே?*

✦ வினாயகன் சிலைகளை பூஜைக்குப் பின், ஆறு, குளம் ஏரிகளில் கரைப்பது, 'மண்ணில் பிறக்கும் நீ மண்ணுக்கே சொந்தம்' என்ற தத்துவத்தை விளக்கு வதற்குத்தான்.

**– 'தினமலர்' கட்டுரை**

*சும்மா கதை விடாதீங்க... பார்ப்பான் வேதம் ஓதி 'புனித சக்தி' ஊட்டப்படாத வினாயகன் சிலைகளை மக்கள் கோயில் கட்டி வழிபட்டு விடக்கூடாது என்பதுதான் தண்ணீரில் கரைக்கச் சொல்லும் ரகசியம். அது எங்களுக்கும் புரியும். அது சரி, மண்ணில் பிறப்பவர் மண்ணுக்குச் சொந்தம் என்றால், வினாயகனை மண்ணில் குழித் தோண்டி புதைக்க வேண்டியது தானே? ஏன் தண்ணீரில் கரைக்க வேண்டும்?*

✦ கிரிமினல் குற்றத்தில் சிறையில் இருப் பவர்கள் சிறையிலிருந்தபடியே தேர்தலில் போட்டியிட நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு நிறை வேறியது. **– செய்தி**

*அப்போ, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் என்ற பெயரை கிரிமினல் பிரதிநிதித்துவ சட்டம் என்று மாற்றிடுங்க!*

✦ போடி தொழிலதிபர் திருப்பதி ஏழுமலையானுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் தங்கத்தில் 'பாதம்' செய்து காணிக்கையாக்கினார். திருப்பதியிலிருந்து அர்ச்சகர்கள் நேரில் வந்து பூஜை செய்து எடுத்துச் சென்றனர். **– செய்தி**

*ஏழுமலையானுக்கு ஒரு பக்தர் தங்கத்தில் 'முளை' செய்து தர விரும்புகிறார். ஏழுமலையான் அர்ச்சகர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்வார்களா?*

✦ 'கடவுள் அவதார சாமியார்கள் மற்றும் சோதிடர்'களை நாங்கள் கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் மக்களுக்கு சேவை செய்கிறார்கள். அதற்காக ஊதியத்தையும் பெறுகிறார்கள். அவர்களும் 'தொழில் முனைவர்'கள் தானே?

**– அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ கிளை தீர்ப்பு (செப்.3)**

*அப்படின்னா, ஒரு சந்தேகம்! சீட்டுக் கம்பெனி நடத்தி மோசடி செய்தவர்கள்; வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவதாக மோசடி செய்பவர்கள் கூட 'சேவைக்கு பணம்' பெறுவோர் தான். அவர்களையும் சோதிடர், சாமியார்களாகவே கருதி அலகாபாத் நீதிமன்றம் தொழில் முனைவோர் பட்டியலில் சேர்த்து விடுமா?*

✦ பில்லி சூன்ய மோசடிக்கு எதிராக சட்டம் கொண்டு வர வலியுறுத்திய மராத்திய பகுத்தறிவாளர் தபோல்கார், பில்லி சூன்ய நம்பிக்கையாளர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டார். **– செய்தி**

*பில்லி சூன்யம் உண்மை என்று நம்பும் கும்பல் அதை ஏவி விட்டிருக்கலாமே! ஏன் துப்பாக்கியை தூக்க வேண்டும்?*

✦ பகவான் கிருஷ்ணரை கடுமையாக அவமதித்து அறிக்கை வெளியிட்ட தி.க. தலைவர் கி.வீரமணி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி யாதவ மகா சபைத் தலைவர் டி.தேவநாதன், காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் மனு கொடுத்தார்.

**– செய்தி**

*அடேங்கப்பா.... கிருஷ்ணனுக்காக எப்படி கூவுறாரு பார்த்தீங்களா? அப்படி ஒரு 'ஃபீலிங்கு'!*

✦ அரசு கோயில்களில் சேர்ந்துள்ள தங்கம், மக்களின் காணிக்கை. இதனை எடுக்கவோ, கொடுக்கவோ யாருக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை.

**– இராமகோபாலன் அறிக்கை**

*இப்படி அறிவிக்கும் அதிகாரத்தை இராம கோபாலனுக்கு யார் கொடுத்தார்களாம்? எந்தக் கடவுளிடம் இந்த அதிகாரத்துக்கான 'வரம்' பெற்று வைத்திருக்கிறார் என்பதையும் விளக்கினால் நல்லது!*

✦ கோயில் அர்ச்சகர்களை அரசு ஊழியர்களாகக் கருதி, அரசு ஊழியர்களுக்குரிய சலுகைகளை வழங்க வேண்டும்.

**– ஓய்வு பெற்ற அர்ச்சகர் உயர்நீதிமன்றத்தில் பொது நலன் வழக்கு**

*ஓ.... தாராளமாக கருதலாமே! அரசு ஊழியர்கள் நியமனத்தில் பின்பற்றும் 69 சதவீத தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை அர்ச்சகர் நியமனத்திலும் பின்பற்றினால், அர்ச்சகர்களும் அரசு ஊழியர்களாகிடலாம்!*

✦ மனித மலத்தை மனிதனே எடுக்கும் தொழிலில் ஈடுபடுத்துவோரை 5 ஆண்டுகள் தண்டிக்க நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது. **– செய்தி**

*இந்தச் சட்டத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய முதல் மனிதர் குஜராத் மோடி தான்! அவர் தான் மலம் எடுக்கும் தொழில் தான் மிக உயர்ந்த கடவுள் திருப்பணி என்று நூல் எழுதியுள்ளார்.*

✦ மத்திய அரசு மகாராஷ்டிராவைப் போல் மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். **– கலைஞர் அறிக்கை**

*எதிர்கட்சியாக இருக்கும்போது கலைஞர் கொள்கையில் 'சொக்கத் தங்கம்' தான். ஆனால், ஆளும் கட்சியாக இருக்கும்போது மட்டும் கட்சியில் உருவாக்கிய பகுத்தறிவு அணியையும் சரி; ஆட்சியில் உருவாக்கிய சமுதாய சீர்திருத்தக் குழுவையும் சரி செயல்பட விடாமல் முடக்கிப் போட்டுவிடுவார்.*

✦ இலங்கைக்கு இரண்டு போர்க் கப்பல்களை மத்திய அரசு வழங்குவது, ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தில் எடுத்த முடிவு; இப்போது எடுக்கப்பட்ட முடிவு அல்ல.

**– அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்**

*ஏற்கனவே செய்து கொண்ட ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை குப்பைக் கூடையில் தூக்கி எறிந்துவிட்டதே இலங்கை. அதைத் தட்டிக் கேட்டீர்களா? சரி; அது போகட்டும்! பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் காந்தியும், இர்வின் பிரபுவும் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தப்படி நிறைவேற்றப்பட வேண்டிய அம்சங்கள் ஏதாவது இருந்தால், அதையும் சொல்லி விடுங்கள்!*

✦ இலங்கையில் என்னை சந்தித்த பத்திரிகையாளர் மற்றும் மக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

**– அய்.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை**

*அய்.நா. மனித உரிமை ஆணைய தலைவரின் உரிமைகளே பறிக்கப்படும் ஒரு நாட்டில் காமன்வெல்த் தலைவர்கள் மாநாடு கூட்டுவதற்காக வெட்கித் தலைகுனிய வேண்டும்!*

✦ திண்டுக்கல்லிலிருந்து கச்சத் தீவுக்கு தடையை மீறி இந்து மக்கள் கட்சியினர் கொண்டு செல்ல முயன்ற 'விநாயகனை' போலீசார் பறிமுதல் செய்தனர்.

**– செய்தி**

*நல்ல நடவடிக்கைதான்! 'வினாயகன்' திண்டுக்கல்லிலேயே தங்கி ஒவ்வொரு நாளும் காவல் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் நிபந்தனை விதிப்பது, நல்லது!*

✦ வினாயகர் சதுர்த்தி தினத்தில் கன்னியாகுமரி அருகே சிறப்பு வழிபாடுகள் முடிந்த பிறகு, நள்ளிரவில் கோயில் கதவை உடைத்து, சிலை திருட்டு, போலீசில் புகார்.

**– செய்தி**

*வினாயகனே கோயில் கதவை உடைத்து, வெளியே போய் கொண்டாட்டங்களைப் பார்வையிட சென்றிருப்பாரா என்ற கோணத்திலும் காவல்துறை புலன் விசாரணை நடத்துவது நல்லது.* ✦

## சென்னையில் பெரியார் கைத்தடி ஊர்வலம்

*சென்னையில் வினாயகன் சிலை ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் கைத்தடி ஊர்வலம்*

*15.09.2013, ஞாயிறு மாலை 4 மணிக்கு ஐஸ் அவுஸ் மசூதியிலிருந்து*

*தலைமை: இரா. உமாபதி, சென்னை மாவட்டச் செயலாளர்*

*சுற்றுச் சூழலை – கடல் நீரை மாசுப்படுத்தும் இரசாயனக் கலவை சிலைகளை தடைச் செய்!*

*கோயிலில் இருக்க வேண்டிய சிலைகளை வீதிகளில் அனுமதிக்காதே!*

*தமிழகத்தை மதக் கலவர பூமியாக்காதே!*

**– திராவிடர் விடுதலைக் கழகம், சென்னை மாவட்டம்.**

DATE OF PUBLICATION 12.09.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM
TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கடலில் மூழ்கப் போகும் ரூ. 9 இலட்சம் வெள்ளி வினாயகன்

சென்னை புளியந்தோப்பில் ஒரு வினாயகன் கடலில் மூழ்க தயாராகி யுள்ளான். இது சாதாரண வினாயகன் அல்ல. 19 கிலோ வெள்ளியில் 9 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்ட விநாயகன் சிலை. ஆன்மீக 'கார்ப்பரேட்' வணிகம் நடத்தி வரும் நித்யானந்தா மடத்தில் உருவான இந்த சிலையை அதாவது 9 இலட்சத்தை கடலில் கொட்டப் போகிறதாம் சிவசேனை!

பக்தர்களையே கேட்கிறோம், உள்ளத்தைத் தொட்டுப் பதில் சொல்லுங்கள்!

பக்தியின் பெயரால் 9 இலட்சம் வெள்ளியை வினாயகன் சிலையாக்கி, கடலில் போய் மூழ்கடிப்பது நியாயம் தானா?

இதைவிட மக்கள் விரோத மனிதநேயமற்ற செயல் வேறு இருக்க முடியுமா? இதற்குப் பெயர்தான் பக்தியா? அரசும் பக்தியின் பெயரால் நடக்கும் இந்த வீண் விரயத்தை அனுமதிக்கப் போகிறதா?

## ஒரு வாசகரின் கடிதம்

பேரன்பிற்கினிய 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஆசிரியர் அவர்களுக்கு,

திராவிடர் விடுதலைக் கழகம் மிகச் சீரிய முறையில் வீதிக் கூட்டங்களை நடத்துவது, பரப்புரை பயணங்கள், நாத்திகர் விழா, அரசால் சாதி வெறி பிடித்தவர்களால் நடைபெறும் அநீதிகளை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்துவது என பல முறைகளில் பெரியார் கருத்துகளை முன்னெடுத்து மக்களிடையே சேர்க்கின்ற அரிய பணிகளைப் பாராட்டி மகிழ்கிறேன். திராவிடர் விடுதலைக் கழகத்தின் புரட்சிப் பணி மேலும் மேலும் தொடர விழைகிறேன்.

இம்மடலுடன் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு ஐந்து ஆண்டு சந்தாத் தொகை ரூ.1000/-மும், திராவிடர் விடுதலைக் கழக வளர்ச்சி நிதியாக ரூ.1000/-மும், 9.9.2013 அன்று என் துணைவியார் இரா. வசந்தா அவர்களின் 60 ஆம் ஆண்டு நிறைவு மற்றும் எங்கள் (பொன்.இராமச்சந்திரன்-இரா.வசந்தா) இனிய இல்வாழ்க்கையின் 45 ஆண்டு நிறைவின் நிறைவாக அனுப்பியுள்ளேன். பெற்றுக் கொள்ளவும்.

**– பொன். இராமச்சந்திரன், பம்மல், சென்னை–75.**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 9 ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளித்த வரிச் சலுகை ரூ.30 லட்சம் கோடி; இப்போது ரூபாய் மதிப்புச் சரிகிறது; அந்நியச் செலாவணி என்ற அமெரிக்க டாலர் கையிருப்பு ரூ.29,000 கோடி மட்டும்தான்; அடுத்த ஆண்டு மார்ச் மாதம் - திருப்பித்தர வேண்டிய வெளிநாட்டுக் கடன் ரூ.17,200 கோடி போன்றவற்றை திருப்பி தந்துவிட்டால் மிஞ்சப் போவது ரூ.11,800 கோடி மட்டுமே; எப்படி பெட்ரோலியப் பொருட்களை, தங்கத்தை, மருந்துப் பொருள்களை இறக்குமதிச் செய்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

'கடவுள்' முதலாளிகளான திருப்பதி ஏழுமலையான், திருவனந்தபுரம் பத்மநாபசாமி, மும்பை சித்தி விநாயகன் உள்ளிட்ட பல்வேறு கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கம் சுமார் 30,000 டன் என்று மதிப்பிடப்படுகிறது. திருப்பதியில் மட்டும் 1000 டன். இது இந்தியாவில் நடப்பு ஆண்டில் இறக்குமதியாக உள்ள தங்கத்தைவிட இரண்டு மடங்காகும்.

உலகிலேயே தங்கம் கையிருப்பு அதிகம் உள்ள நாடு அமெரிக்கா; அங்கே தங்கம் முழுதும் அரசுக் காப்பகத்தில்தான் இருக்கிறது. அதனால்தான் டாலர் தங்கமாகக் கருதப்படுகிறது. இரண்டாவது இடத்தில் இருப்பது இந்தியா. ரிசர்வ் வங்கியில் இருப்பதைவிட கோயில்களில் அதிகம் முடங்கிக் கிடக்கிறது; முடங்கிக் கிடக்கும் தங்கத்தை ரிசர்வ் வங்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் அது நாட்டின் பொருளாதாரக் கையிருப்பாக மாற்றப்படும். நெருக்கடியிலிருந்து - தற்காலிகமாக மீள முடியும்.

பக்தர்கள் காணிக்கையாக்கிய தங்கத்தை நாட்டுக்குப் பயன்படுத்துவதில் என்ன தவறு? குறைந்தபட்சம் அரசுக் 'கடன் பத்திரம்' எழுதித் தந்தாவது இந்தத் தங்கத்தை திருப்பித் தரும் கடனாக எடுத்துக் கொள்ள ஏன் முன்வரக் கூடாது?

இதைச் சொன்னால் தெய்வக் குற்றம் என்று பார்ப்பனர்கள் அலறுகிறார்கள்; தேச விரோதம் அனுமதிக்க முடியாது என்கிறார் சுப்பிரமணிய சாமி; கோயில் தங்கத்தை எடுத்தால் போராடுவோம் என்கிறார் விசுவ இந்து பரிஷத் தலைவர் பிரவீன் தொகாடியா; இந்தப் பேச்சுக்கே இடமில்லை என்று மாநிலங்களவையில் கொக்கரிக்கிறார் பா.ஜ.க. வெங்கையா நாயுடு; இந்து விரோதம் என்கிறார் இராமகோபாலன்.

நாட்டின் பொருளாதாரத்தை அழிவுப் பாதைக்கு இழுத்துச் சென்ற 'பிறவி முதலாளி' களான பார்ப்பனர்கள், இப்போது இந்தச் சீர் கேட்டைச் சரி செய்ய, 'கல் முதலாளி' கடவுளிடம் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை பயன்படுத்தலாம் என்றால் கை வைக்காதே என்று மிரட்டுகிறார்கள்.

கல் முதலாளிகளான கடவுள் - கோயில்களை கட்டுப்பாட்டில் வைத்துள்ள பிறவி முதலாளி களான பார்ப்பனர்கள் - இந்திய பன்னாட்டு முதலாளிகளுக்கு நாட்டை அடகு வைத்து மக்களை வாட்டி வதைக்கும் - பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம்!

மத்திய அரசே! கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை பொருளாதார நெருக்கடியி லிருந்து மீட்பதற்குப் பயன்படுத்து! பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் சலுகைகளை நிறுத்து! உள்நாட்டு தொழில் உற்பத்தியைப் பெருக்கு! - என்ற கோரிக்கைகளை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

# நாத்திகர் பேரணி முழக்கங்கள்

செப்.1 அன்று நடந்த சென்னை நாத்திகர் பேரணியில் எழுப்பிய முழக்கங்கள்.

நம்பாதீங்க! நம்பாதீங்க!
சாமியார் கூட்டத்தை நம்பாதீங்க!
நாட்டு நடப்ப பாருங்க!
ஏமாத்துறான் பாருங்க!
நம்பி வந்த பெண்களை
கெடுக்கிறானுக பாருங்க!
ஏமாத்துறதைப் பாருங்க!
ஜெயிலுக்குள்ளே பெயில் கேட்டு
கம்பி எண்ணுறான் பாருங்க!

நம்பாதீங்க! நம்பாதீங்க!
சோதிடத்தை நம்பாதீங்க!
நல்ல நேரம் பார்த்து
சோதிடத்தை பார்த்து
நடத்தி வச்ச கல்லாணம்
ரத்து கேட்குது பாருங்க!

பொய்யுங்க! பொய்யுங்க!
சோதிடம் எல்லாம் பொய்யுங்க!
நல்ல நேரம் கெட்ட நேரம்
நல்லவனுக்கு வேணாங்க!
ராகு காலம், எமகண்டம்
எந்த நாட்டில் இருக்குங்க!

பொய்யப்பா! பொய்யப்பா!
வாஸ்து சாஸ்திரம் பொய்யப்பா!
புயலடிச்சி பூகம்பம் வந்தா
வாஸ்து வீடு இடியாதா?
வங்கிக் கடன் கட்டாட்டி
வாஸ்து வீடு ஏலம் போகாதா?

தமிழக அரசே! தமிழக அரசே!
தடை செய்! தடை செய்!
மூடநம்பிக்கைகளை தடை செய்!
சட்டமியற்று சட்டமியற்று!
மூடதனத்தை ஒழித்திடவே!
சட்டம் இயற்று! சட்டம் இயற்று!

வீரவணக்கம்! வீரவணக்கம்!
துப்பாக்கிக் குண்டுக்கு பலியான
தபோல்கருக்கு வீரவணக்கம்!

எல்லாம் கடவுள் சக்தி என்றால்
நோய் கொடுத்தது யாருங்க?
எல்லாம் கடவுள் சக்தி என்றால்
வறுமையை தந்தது யாருங்க?
எல்லாம் கடவுள் சக்தி என்றால்
குற்றங்கள் பெருகுவது ஏனுங்க?
எல்லாம் கடவுள் சக்தி என்றால்
பொருளாதார நெருக்கடி ஏனுங்க?

எல்லாம் கடவுள் சக்தி என்றால்
கோயிலுக்கு பூட்டு ஏனுங்க?
எல்லாம் கடவுள் சக்தி என்றால்
உண்டியல் திருட்டு ஏனுங்க?
எல்லாம் கடவுள் சக்தி என்றால்
சாமி சிலை திருட்டு ஏனுங்க?
எல்லாம் கடவுள் சக்தி என்றால்
மதத்துக்குள் சண்டை ஏனுங்க?
எல்லாம் கடவுள் சக்தி என்றால்
சாதி சண்டை ஏனுங்க?

உரிமை உண்டு! உரிமை உண்டு!
எங்களுக்கு உரிமை உண்டு!
பகுத்தறிவை பரப்பிடவே
எங்களுக்கு உரிமை உண்டு!

## சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் பெரியார் பிறந்த நாள் விழா – கால் பந்து போட்டி

சென்னை மயிலைப் பகுதியில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் செப். 17 அன்று பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டமும், செப்.15 ஆம் தேதி சிறுவர்களுக்கான கால்பந்து போட்டியும் நடத்துகிறது. கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு செப்.17 ஆம் தேதி பொதுக் கூட்டத்தில் பரிசுகள் வழங்கப்படும். செப்.17 இல் மந்தைவெளி மார்க்கெட்டில் ம. பூர்ணிமா தலைமையில் நடக்கும் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஆதித் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் அதியமான் உரையாற்றுகிறார்கள். புதுச்சேரி தலித் சுப்பையா குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

## போராளி தமிழரசன் தாய் 100 ஆவது பிறந்த நாள்

ஜாதி ஒழிப்பு, தமிழ்த் தேச விடுதலையை இணைத்து இளைஞர் படையை திரட்டிப் போராடிய தமிழினப் போராளி தமிழரசன், காவல்துறை சதியால் 1987இல் பொன்பரப்பியில் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். அவரது தாயார் பதுசுஅம்மாள் 100 ஆவது பிறந்த நாளும், தமிழரசன் நினைவு நாளும் அவர் கொலை செய்யப்பட்ட பொன் பரப்பியில் செப். 3 ஆம் தேதி நடந்தது. பதுசு அம்மாள் எடைக்கு எடை நாணயம் வழங்கப்பட்டது. பொறியியல் பட்டப் படிப்பை பாதியில் உதறிவிட்டு, போராட்டக் களத்துக்கு வந்த தமிழரசன், 1985 இல் மீன்சுருட்டியில் ஜாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தி, தமிழின ஒற்றுமைக்கு ஜாதி ஒழிப்பு இயக்கம் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை கொள்கைப் பிரகடனமாக அறிவித்தவர் ஆவார்.

## தூக்குத் தண்டனைக்கு எதிர்ப்பு

அண்மையில் 18 மாநிலங்களில் 267 தொகுதிகளில் 20,000 வாக்காளர் களிடம் எடுத்த ஒரு கணக்கெடுப்பில் 40 சதவீதம் பேர் தூக்குத் தண்டனை வேண் டாம்; ஆயுள் தண்டனையே போதும் என்று கருத்து தெரிவித்துள்ளார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 13th September 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | செப்டம்பர் 19, 2013 | புரட்சி 12 | முழக்கம் 36 | விலை: ரூ.3.00

## கோயிலில் முடங்கிடும் தங்கம்: நாட்டின் சொத்தா? பார்ப்பனர் சொத்தா?

# திராவிடர் விடுதலைக் கழகம் ஆர்ப்பாட்டம்

*“கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை ரிசர்வ் வங்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க வேண்டும்; கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சலுகைகளை ரத்து செய்ய வேண்டும்; உள்நாட்டு தொழில் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்” என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.*

**ஈரோட்டில் கைது**



ஈரோடு மாவட்டத்தில் தலைமை தபால் அலுவலகம் முன்பு 13 ஆம் தேதி மாலை 4 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநிலப் பொருளாளர் ப.இரத்தினசாமி தலைமை தாங்கினார். ஈரோடு மண்டலச் செயலாளர் இராம. இளங்கோவன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கோரி ஏற்கனவே காவல்துறையினரிடம் கழகம் சார்பில் மனு கொடுக்கப்பட்டிருந்தது. ஈரோட்டில் விநாயகன் சதுர்த்தி ஊர்வலம் முடிந்த பின் பரிசீலிப்பதாக காவல்துறையினர் கூறியிருந்தனர். ஆனால், விநாயகன் ஊர்வலம் முடிந்த பின்பும் காவல்துறை ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை. எனவே, தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. “கோவில் நகைகளை அரசு கையகப்படுத்த வேண்டும். மக்களால் கோவில்களுக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட நகைகள் மக்களுக்கே பயன்படும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 27 தோழர்களை காவல்துறை கைது செய்தது. தோழர்கள் ஈரோடு பிரபு மகால் மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். இரவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திகசோதி, மாவட்டச் செயலாளர் நிவாசு, தெற்கு மாவட்டச் செயலாளர் சண்முகப்பிரியன், நாமக்கல் மாவட்டச் செயலாளர் வைரவேல், இளைஞரணி அமைப்பாளர் கலைமதி, பள்ளிபாளையம் சரவணன், வேணுகோபால், ஈரோடு நகரத் தலைவர் திருமுருகன், நகரச் செயலாளர் சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சேலம் (மேற்கு)**

சேலம் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக 13.9.2013 வெள்ளிக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் மேட்டூர் பெரியார் பேருந்து நிலையம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோவில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்குப் பயன்படுத்து! பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் சலுகைகளை நிறுத்து! உள்நாட்டுத் தொழில் உற்பத்தியைப் பெருக்கு! ஆகிய கோரிக்கைகளுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் முன்பாக, சுயமரியாதை கலைக் குழுவினரின் வீதி நாடகம் நடைபெற்றது. முருகன் (கடவுள்) மற்றும் பார்ப்பனர்கள் வேடமணிந்திருந்தது பொது மக்களை ஈர்த்தது. மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு துவக்க உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மேட்டூர் ஜஸ்டின்ராஜ் ஆகியோர் உரையாற்றினர். மேட்டூர் நகரச் செயலாளர் சம்பத் நன்றி கூறினார்.




மேட்டூரில்

**சென்னையில்**

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகரன், மாவட்ட தலைவர் ஜான், செயலாளர் உமாபதி, பொருளாளர் வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் சுகுமார், காஞ்சி மாவட்ட செயலாளர் தினேஷ், அமைப்பாளர் செங்குட்டுவன், பொருளாளர் சேகர் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர். கல் முதலாளி கடவுள்,

(4ஆம் பக்கம்)

## வினாயகன் சிலை ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் கைத்தடி ஊர்வலம்: கழகத்தினர் கைது






*15.9.2013 ஞாயிறு அன்று சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சுற்றுச் சூழலை நதி நீரை மாசுபடுத்தும், இரசாயன வினாயகன் சிலை ஊர்வலங்களை தடை செய், கோயிலில் இருக்க வேண்டிய சிலையை வீதிகளில் அனுமதிக்காதே, தமிழகத்தை மதக்கலவர பூமியாக்காதே என்ற முழக்கங்களுடன் வினாயகன் சிலை ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் கைத்தடி ஊர்வலம், சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி தலைமையில் திருவல்லிக்கேணி ஐஸ்அவுஸ் காவல் நிலையம் அருகில் மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.*

*போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட பொருப்பாளர்கள் பா.ஜான், வேழவேந்தன், ஆ.வேலு, ஏசுகுமார், தட்சணாமூர்த்தி, சுனில், அருள்தாசு, காஞ்சி மாவட்ட பொறுப்பாளர்கள் டேவிட் பெரியார், தினேஷ், சேகர், திருவல்லிக்கேணி பொருப்பாளர்கள் பிரகாசு, அருண், செந்தில், விழுப்புரம் அய்யனார், தமிழ்ச் செல்வி, ஜெயந்தி, அம்பிகா, புனிதா, உஷா உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கைதாகி திருவல்லிக்கேணி சமுக நலக் கூடத்தில் வைத்து பின் விடுதலை செய்யப்பட்டனர்.*

## கொள்கைகளை நிர்ணயிப்பவர்களே 'அவாள்' தான்!

# பார்ப்பன அதிகார வர்க்கம் வலிமை பெறுகிறது

## பயணத் தொடக்க விழாவில் விடுதலை இராசேந்திரன் உரை

***மக்கள் பிரதிகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பார்ப்பன உயர்ஜாதி அதிகார வர்க்கம் கொள்கைகளை நிர்ணயித்து அமுல்படுத்தி வருகிறது என்று மயிலாடுதுறையில் ஜூலை 24 அன்று சுயமரியாதை சமதர்மப் பயணத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார். அவரது உரை:***

சுயமரியாதை, அந்த சொற்களுக்குள் அடங்கி இருக்கிற பொருள் ஒரு சமூகம், அந்த சமூகத்தில் வாழ்கின்ற மனிதன் தன்மானம் உள்ள மனிதனாக, சுயமரியாதை உள்ள மனிதனாக, வாழ்ந்தால் அவன் ஒரு மனிதன் என்பதற்கான அடையாளம். அந்த சுயமரியாதை அடையாளத்தை இந்த சமூகத்திற்கு குறிப்பாக இந்த பார்ப்பனர் அல்லாத சமூகத்திற்கு மீட்டு தருவதற்காக வந்த இயக்கம் தான் பெரியார் இயக்கம். 1932ம் ஆண்டு பெரியார் தன்னுடைய சுயமரியாதை கொள்கைகளோடு சமதர்ம கொள்கைகளையும், இணைத்து சுயமரியாதை சமதர்மத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தை ஈரோடு நகரத்திலே வகுத்தார்கள். அதாவது சுயமரியாதை கொள்கைகளோடு பொதுவுடமை கொள்கைகளையும், இணைக்கின்ற சமூக அரசியல் கோட்பாடுகளை முன்வைக்கின்ற ஒரு திட்டம்,

அன்றைய பிரிட்டிஷ் ஆட்சி பொதுவுடமை என்றாலே தங்களுக்கு எதிரி என்று கருதப்பட்ட நாளில் சுயமரியாதை இயக்கத்தையே தடை செய்யும் ஒரு நிலை உருவான போது சமதர்ம திட்டத்தை வேண்டுமானால் நான் பிறகு பார்த்துக் கொள்வேன். ஆனால் இந்த சுயமரியாதையை பேசுவதற்கு இந்த மண்ணில் வேறு யாரும் இல்லை எனவே அந்த இயக்கம் நடத்தப்படவேண்டும் என்பதற்காக அந்த சமதர்ம திட்டத்தை சற்று ஒத்தி வைத்துவிட்டு பெரியார் சுயமரியாதை இயக்கத்தை முன்னெடுத்தார். இன்றைய காலச்சூழலில் மனிதனின் இழிவை ஒழிக்கிற அந்த கோட்பாடுகளோடு சமத்துவம் என்கிற ஒரு கோட்பாட்டை இணைக்க வேண்டிய காலகட்டம் வந்திருக்கிறது என்று திராவிடர் விடுதலைக் கழகம் கருதுகிறது. அந்த அடிப்படையில் நாட்டு மக்களிடம் சில கருத்துக்களை விதைக்க வேண்டும் என்று இந்த இயக்கத்தைச் சார்ந்த இளைஞர்கள் முன்னெடுத்து இருக்கிறார்கள். இந்த பயணத்திற்கான திட்டங்களை உருவாக்கியது இந்த இயக்கத்தினுடைய இளைஞர்கள் இந்த பயணத்திற்கான உழைப்பை வழங்குவதும் இந்த இயக்கத்தின் இளைஞர்கள், இந்த பயணத்தோடு மட்டுமல்ல இந்த கொள்கைக்கு இந்த லட்சியத்திற்காக தங்களுடைய வாழ்க்கையை அர்பணித்துக்கொண்டு பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் இணைத்துக் கொண்டு இதனால் தங்கள் சொந்த நலனுக்கு, சுயலாபத்திற்கு எந்தவித வருமானமோ லாபமோ இல்லாமல் சமூதாயத்தின் கவலை ஒன்றையே கருதி இந்த பணியில் களப்பணியாற்ற வந்திருக்கிறார்கள் இது ஒரு மிகமிக அபூர்வமான ஒரு செய்தியாகும். அந்த இளைஞர்கள் தான் இங்கே வீதி நாடகத்தை நடித்து காண்பித்தார்கள். பறை இசையை ஒலித்தார்கள். ஜாதி தீண்டாமைக்கு எதிரான பறை இது என்கிற முழக்கத்தோடு ஜாதி வெறியை பிணமாக்கி காட்டி நம்மிடத்திலே தன்மான உணர்ச்சியை தூண்டிவிட்டிருக்கிறார்கள்.

ஜாதி தீண்டாமை ஒடுக்கு முறைகளையும், பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளையும் பெரியார் தந்த சுயமரியாதை பார்வையில் அந்த வெளிச்சத்தில் மக்கள் மன்றத்திலே கொண்டு செல்லுகின்ற பயணமாக இந்த பயணம் அமையவிருக்கிறது. அந்த சுயமரியாதை கருத்துகளோடு சமதர்மம் என்கிற கருத்துக்களையும், ஏன் இணைக்க வேண்டும் என்று சொன்னால் இந்த சமுதாயம் சுயமரியாதை உள்ள சமுதாயமாக மாறுவதற்கு சமதர்மம் என்கிற கொள்கை அவசியத் தேவையாகிறது. அரசினுடைய பொருளாதார திட்டங்கள் எல்லாம் ஏற்கனவே சுயமரியாதையை இழந்து நிற்கின்ற இந்த சமூதாயத்தை மேலும் இழிநிலையில் உள்ள மக்களாக மேலும் புறந்தள்ளக் கூடிய மக்களாக மாற்றக்கூடிய ஒரு கொள்கை யாகவே இருக்கிறது. 1990ம் ஆண்டில் மண்டல் குழு பரிந்துரை அமல்படுத்தப்பட்டபோது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு ஒரு சில மத்திய அரசு பணிகளில் மட்டும் உண்டு என்ற ஆணை வந்தபோது ஜாதீய ஆதிக்கவாதிகள், பார்ப்பனர்கள் ஒரு பெரும் கலவரத்தை உருவாக்கினார்கள் அதன் காரணமாக இந்த ஆணையை பிறப்பித்த வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்தே போனது, அதற்கு ராமன் கோவிலை கொண்டு வந்து காரணம் காட்டி ஆட்சியை கவிழ்த்தார்கள்.

அதற்குப் பிறகும் அந்த இடஒதுக்கீடு ஆணை சட்டமாகி இந்த நாட்டில் அமல்படுத்தப்பட்டது. மத்திய அரசிலே சில அரசு பதவிகள் அரசு பணிகள் இவைகள் எல்லாம் இருந்தால் தானே நீங்கள் 27 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியும். எனவே மத்திய அரசினுடைய பதவிகள், பணிகள் பொதுத் துறைகள் அத்தனையும் இல்லாமல் ஒழிப்போம் பார் என்பதற்காக இந்த நாட்டில் பார்ப்பன சக்திகளால் உருவாக்கப்பட்ட ஒரு கொள்கை தான் புதிய பொருளாதார கொள்கை.

அது அமலுக்கு வந்தபிறகு அவசர அவசரமாக மத்திய அரசினுடைய பணி நியமனங்கள் நிறுத்தப்பட்டன. மத்திய அரசினுடைய பல துறைகள் தனியாருக்கு ஏலம் விடப்பட்டன. பொதுத் துறைகள் வேகவேகமாக தனியார் நிறுவனமாக மாற்றப்பட்டன. பங்குகளை விற்கின்ற ஒரு நிலைமை வேக வேகமாக தொடங்கியது அதன் காரணமாக அரசு பொதுத் துறைகளில் அரசாங்க நிர்வாக கட்டமைப்பில் கொள்கை முடிவு எடுக்கின்ற இடங்களில் இந்த நாட்டினுடைய பொருளாதார கொள்கைகளை முடிவு எடுக்கின்ற மையங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு இடம் இல்லாமல் ஓரங்கட்டப்பட்டு அதனுடைய அதிகாரம் எல்லாம் இந்த நாட்டில் இருக்கின்ற பார்ப்பன உயர்ஜாதி அதிகார வர்க்கங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டன.

புதிய பொருளாதார கொள்கைகளை கொண்டு வந்தபோது அவர்கள் சொன்னார்கள், இதனால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் உயரப் போகிறது வெளிநாட்டுக்காரர்கள் இந்த நாட்டில் அவர்களுடை தொழில் நுட்பத்தைக் கொண்டு வருவார்கள். நம்முடைய தொழில் நுட்பம் வெளிநாட்டிற்கு போகும். எனவே வெளிநாட்டின் தொழில் நுட்பத்திற்கும், நம்முடைய தொழில் நுட்பத்திற்கும் இடையே பெரிய போட்டி வரப் போகிறது. அந்த போட்டியில் இங்கு நாம் பெரிய சந்தையை உருவாக்கப் போகிறோம், இறக்குமதி செய்யப் போகிறோம், அதேபோல் ஏற்றுமதியும் செய்யப் போகிறோம், சர்வதேச தரத்திற்கு இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்தப் போகிறோம் என்றெல்லாம் ஜாலவார்த்தைகளை காட்டி கொண்டு வந்த அந்த திட்டம் அவர்கள் சொன்ன அந்த இலக்கை அடைந்திருக்கிறதா? இந்தியாவிற்குள் வெளிநாட்டு சுரண்டல் படையெடுத்துக்கொண்டு இருக்கிறதே தவிர இந்தியாவின் உள்நாட்டு தொழில் உற்பத்திகள் அத்தனையும் அழிந்து நாசமாகிப்போய் சிறுதொழிலை குறுந்தொழிலை நடத்துகிறவன் பிளாட்பாரத்திற்கு தள்ளப்படுகின்ற ஒரு நெருக்கடியைத்தான் உருவாக்கினார்கள். மண்டல் குழு அறிக்கையை கொண்டு வந்தாயே உன்னை நான் பழிவாங்கி காட்டுகிறேன் பார் என்று இன்றைக்கு மக்கள் மீது திணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

விவசாய தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் அந்த விவசாயம் பன்னாட்டு நிறுவனங்கள் நிர்ணயிக்கின்ற விவசாயமாகி அந்த விவசாயத்திற்குள் செயற்கையாக விளைவிக்கப்பட்ட கத்திரிக்காய்கள் உருவாக்குகிறார்கள். பன்னாட்டு உற்பத்தியான செயற்கை உரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான, பல லட்சக் கணக்கான விவசாயிகள் பூச்சிகளை அழிக்கக்கூடிய வயலுக்கு விடவேண்டிய பூச்சி மருந்துகளை தாங்கள் சாப்பிட்டு உயிரை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது நாங்கள் வெளிநாட்டு மூலதனங்களை இறக்குமதி செய்ய போகிறோம் என்கிறார்கள். இந்திய ரூபாயின் மதிப்பு அமெரிக்க டாலருக்கு எதிராக ரூபாய் 61ஆக படுசரிவை சந்தித்து விட்டது. அமெரிக்க டாலருக்கு நிகராக இந்தியாவின் ரூபாயின் மதிப்பு சரிந்து விட்டது என்றால் என்ன அர்த்தம்? வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு பொருளுக்கும் நாம் டாலருக்கு ரூபாய் என்கிற அடிப்படையில் தான் நாம் செலுத்த வேண்டும். அப்போது இறக்குமதிக்கு இதுவரை கொடுக்க வேண்டி இருக்கிற பணம் டாலருடைய மதிப்பு ரூபாயின் மதிப்பு சரிய சரிய நாம் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பணத்தின் மதிப்பு அதிகரித்து கொண்டே போகிறது. இன்னொரு பக்கம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி ஆகின்ற பொருள்களுக்கு வரிகளை இந்திய அரசு கணிசமாக குறைத்து விட்டது.

அதுமட்டும் அல்ல, அரசாங்கத்தினுடைய அய்ந்தாண்டு திட்டங்களில் அடிப்படையான உற்பத்திகளை செய்யகூடிய வளங்களை ஏற்படுத்தக் கூடிய நீண்டகால திட்டங்களுக்கான செலவு தொகை மிக கனிசமாக குறைக்கப்பட்டது. உலக வங்கி சொன்னது நீங்கள் உங்கள் நாட்டினுடைய வரவு செலவு திட்டத்தை துண்டு விழாத வரவு செலவு திட்டமாக உருவாக்கவேண்டும் என்றது. வரவு செலவு திட்டத்தில் கல்விக்கான செலவுகளை குறைக்க வேண்டும் மருத்துவத்திற்காக செய்யும் செலவுகளை குறைக்கவேண்டும், ரேஷன் கடைகளில் ஏழை மக்களுக்காக வழங்கப்படுகின்ற அரிசி போன்ற பல்வேறு பொருள்களுக்கு வழங்கப்படுகின்ற மானியங்களை குறைக்கவேண்டும் என்று உலக வங்கி கட்டளையிடுகிறது. கல்வி உரிமையை மருத்துவ செலவை குறைத்துக்கொண்டு அதே நேரத்தில் துண்டு இல்லாத பட்ஜெட்டை போடு என்று இங்கே உள்ள ஆட்சிக்கு வெளிநாட்டில் உள்ளவன் சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு இங்கே உள்ள திட்டங்களுக்கான செலவை குறைத்தார்கள். எனவே பெரிய திட்டங்கள் இல்லாமல் போனது, திட்டங்கள் இல்லாமல் போனதால் நமக்கு வரவேண்டிய வருவாயும் குறைந்தது. வருவாய் குறைந்து போன காரணத்தினால் பொருளாதாரத்தில் பெரிய நெருக்கடி பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த நெருக்கடிகளை சமாளிப்பதற்காக வெளிநாட்டு காரர்களுக்கு மனுப்போட்டு நீ இங்கே மூலதனத்தைக் கொண்டு வா நான் வால்மார்ட் கடைகளாக வணிக நிறுவனமாக, விற்பனை நிறுவனமாக நான் அனுமதி தருகிறேன் என்று சொன்னார்கள்.

இன்றைக்கு பல துறைகளில் 100க்கு 100 சதவீதம் வெளிநாட்டு முதலீட்டை கொண்டு வரப் போகிறார்களாம். தொலைதொடர்பு உட்பட 13 துறைகளில் அப்படி அன்னிய முதலீட்டை அனுமதித்திருக்கிறார்கள். கேட்டால் என்ன சொல்கிறார்கள் என்றால் அன்னியநாடு இங்கு முதலீடு செய்கிற போது அன்னிய பணம் இங்கு வரும்போது நாட்டின் பொருளாதார சரிவை மீட்டுக் கொள்ள முடியும் என்று சமாதானம் சொல்கிறார்கள். ஆனால் அன்னிய முதலீட்டிற்கு கதவு திறந்து விட்ட பிறகு வெளிநாட்டுகாரன் முதலீடு செய்வது இந்த நாட்டின் பங்கு சந்தைகளில் தான் உற்பத்தித் துறையில் மிகக் குறைவுதான். இந்த நாட்டில் நடைபெறும் ஊக வணிகத்திற்கு பணத்தை கொண்டு வந்து முதலீடு செய்கிறான். தொழிற்சாலைகள் துவங்கப் போகிறேன் என்று சொல்லி விளை நிலங்களை வளைத்துப் போட்டு அவற்றை ரியல் எஸ்டேட் தொழிலாக மாற்றம் செய்து அதில் முதலீடு செய்கிறான். இப்படி அன்னிய முதலீட்டிற்கு திறந்து விட்ட மூலதனம் எல்லாம் இந்த நாட்டு மக்களைச் சுரண்டுகிறது. அவன் காரியம் முடிந்த பின்பு அந்த பணத்தை எடுத்துக்கொண்டு அவன் நாட்டிற்கு போய் விடுகிறான். இந்த சூழ்நிலை தொடர்கிறபோது இந்த நாடு திவால் ஆகும். எல்லையை நோக்கி பொருளாதாரம் போய்க் கொண்டு இருக்கிறது.

(3 ஆம் பக்கம்)

# வினாக்கள்... விடைகள்...

+ பிரதமர் ஆகும் கனவு எனக்கில்லை என்று கூறிய மோடி - பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட் டுள்ளார். **– செய்தி**

பிரதமர் வேட்பாளராகும் கனவாவது நிறைவேறட்டுமே என்ற நல்ல நோக்கம் தான்.

+ விநாயகன் சிலைகளை ஊர்வலமாக எந்தப் பகுதி முதலில் எடுத்துச் செல்வது என்பதில் தாம்பரம், பல்லாவரம் பகுதி ஊர்வலக் குழுக்களுக்கு இடையே மோதல்; இரண்டு பேருக்கு கத்திக் குத்து. **– செய்தி**

ஓகோ, ஜாதி-மோதல், மத-மோதல் களைக் கடந்து இந்துவும்-இந்துவும் மோதலா? ஓம் விநாயக நம!

+ குருவாயூர் கிருஷ்ணன் கோயிலிலுள்ள தங்க நகை இருப்புக் குறித்து அரசுக்கு தகவல் தெரிவிக்க வேண்டிய அவசிய மில்லை. **– தேவஸ்வம் போர்டு அறிவிப்பு**

அப்படியா? நகை திருட்டுப் போனால் போலீசில் தகவல் கொடுக்காமல் நேரடியாக போலீஸ் மோப்ப நாய்க்கு அழைப்பு விடுவீர்களோ?

+ குஜராத்தில் - வினாயகர் சிலைகளை கரைப்பதற்காக லாரிகளில் ஏற்றிச் சென்றபோது நடந்த விபத்தில் 5 பக்தர்கள் பலியானார்கள்; 17 பேர் படுகாயமடைந்தனர். **– செய்தி**

லாரியில் வந்த 'வினாயகன்' என்ன ஆனார்? 'கடவுள் அருளால்' உயிர் பிழைத்து விட்டாரா?

+ சென்னை அய்.அய்.டி. நிறுவனத்தின் முறைகேடு குறித்து சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிட்ட உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு அய்.அய்.டி. நிர்வாகம் இடைக்காலத் தடை பெற்றது. **– செய்தி**

இந்த வழக்கிற்கான செலவுகளையும் அய்.அய்.டி.தான் செய்யப் போகிறதா? அல்லது பார்ப்பன நிறுவனங்களிடம், வழக்கு நிதி திரட்டப் போகிறதா?

+ அய்.ஏ.எஸ். - அய்.பி.எஸ். அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவ சிகிச்சை செய்தால் அந்த செலவை அரசு ஏற்கும். **– மத்திய அரசு அறிவிப்பு**

ஏன் மருத்துவச் செலவை மட்டும் ஏற்க வேண்டும்? வெளிநாடு சென்று நிர்வாகம் செய்தாலும் அதற்கு ஊதியச் செலவையும் ஏற்கும் என்று தேச பக்தியோடு அறிவிக்கலாமே!

+ ராஜஸ்தான் மாநில நகர வளர்ச்சி மேம்பாட்டுத் துறை 47 ஜாதிப் பிரிவு களுக்கு தனித்தனியாக சுடுகாடுகளை கட்டுவதற்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. **– செய்தி**

அடுத்து ஜாதி வாரியாக கழிப் பறைகளையும் கட்டி விடுங்கள்! பா.ஜ.க. தேர்தல் அறிக்கையிலும் இந்த திட்டங்களை முன் வைக்கலாம்.

+ வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட கேதார்நாத் கோயில் 86 நாட்களுக்குப் பிறகு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு திறக்கப்பட்டது. **– செய்தி**

இந்த 86 நாட்களும் கோயிலுக்குள் இருந்த 'பகவான்' எங்கே இருந்தார்? எப்படி மீண்டும் கோயிலுக்கு வந்தார்? என்பதை பக்தர்களுக்கு விளக்கினால் நல்லது!

# பா.ஜ.க.-காங்கிரஸ் இரண்டுக்கும் ஒரே பொருளாதாரக் கொள்கைதான்!

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அதே நேரத்தில் இந்த நாட்டில் பெரும் தொழில் அதிபர்களாக இருக்கக் கூடியவர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்பவர்களுக்கு கடந்த ஆண்டு மட்டும் நாடாளுமன்றத்தில் 5 லட்சம் கோடி ரூபாய் வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் ஒருவன் வழக்கு போடுகிறான். லஞ்சம் கொடுப்பதாக கருதி இலவச பொருள்களை வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று வழக்கு வருகிறது. உச்சநீதிமன்றம் என்ன சொல்கிறது? லஞ்சம் கொடுப்பதாக கூறி நாங்கள் இதைத் தடைசெய்ய முடியாது என்றாலும் தேர்தல் ஆணையம் இதை பற்றி பரிசீலித்து இலவசங்களை யாரும் அளிக்கக் கூடாது என்று முடிவு எடுத்து அறிவிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் சொன்னது.

தேர்தல் அறிக்கையிலே இலவசங்களை கட்சிகள் அறிவிப்பது உண்மைதான். ஆனால் தேர்தல் முடிந்து ஆட்சிக்கு வந்த பிறகு ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் கோடி ரூபாய் தொழிலதிபர்களுக்கு வரிவிலக்கு தரப்போகிறேன் என்று எந்த கட்சிக்காரராவது அவரது தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்களா? தேர்தல் அறிக்கையிலே சொல்லாமலே இத்தனை லட்சம் கோடிகள் தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆனால் வெறும் 450 கோடி ரூபாய்க்காக நெய்வேலியில் பங்கை விற்கப் போகிறேன் அதுவும் லாபம் தரக்கூடிய பங்கை எடுத்து விற்கப் போகிறேன் என்று ஒரு பக்கம் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டும், அதற்கு பணம் வேண்டும். இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்ற அத்தனை தங்கமும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது, அதற்கு பணம் வேண்டும். தங்கம் என்பது தொழில்களுக்கு அதன் வளர்ச்சிகளுக்கு எந்த ஆக்கபூர்வமான பங்களிப்பையும் கொடுக்கவில்லை. மாறாக அது முடக்கப்படுகிறது. கோவில்களில் பல்லாயிரக்கணக்கான கோடிகள் முடங்கிப் போயிருக்கிறது. தங்கத்தின் பயனை குறைத்துக் கொள்ளுங்கள் என ஆலோசனை சொல்லுகிறார் அமைச்சர் சிதம்பரம்.

திருப்பதி ஏழுமலையானுக்கு வைரத்திலும் வைடூரியத்திலும் செருப்பு செய்கிறான், தங்கத்திலே தேர் செய்கிறான். வேறு எந்த நாட்டிலாவது பொருளாதாரத்தில் அதுவும் மக்களுக்கு நெருக்கடி வரும்போது கோவிலுக்கு, கடவுளுக்கு தங்கத்தை இப்படி வாரி, வாரி இறைக்கிறானே அதற்கு ஒரு கடிவாளம் போட வேண்டும் என்று கற்பனையில் கூட நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு இந்த நாட்டில் உள்ள பார்ப்பனீயம், இந்துத்துவா போன்றவை நம்மை மூளைச் சலவை செய்து வைத்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஏற்கனவே ஜாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்கள் அந்த ஜாதியின் காரணமாக வறுமையை சந்தித்துக் கொண்டு இருக்கின்ற மக்கள் சுயமரியாதை உணர்வோடு போராடி எழுகிறபோது இந்திய பார்ப்பனீய அரசினுடைய அது பாஜக அரசாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி இந்த கொள்கைகள் மேலும் அவர்களை அடிமைப் படுத்துகின்றன. பாஜக ஆட்சியில் பங்குகளை விற்பதற்காக அருண்சோரி என்கிற பார்ப்பனர் அமைச்சராக இருந்தார்.

அதைத்தான் இன்று காங்கிரஸ் ஆட்சி செய்கிறது. நாளை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தாலும் அதன் கொள்கை இதுதான். வி.பி.சிங் எப்போது 27 சதவீத பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு கொண்டு வந்தாரோ அன்றைக்கு பார்ப்பனர்கள் எடுத்த சபதம், இந்த நாட்டின் கட்டமைப்பை இந்த நாடாளு மன்றத்தை அதிகாரம் இல்லாத நாடாளுமன்றமாக மாற்றிக் காட்டுவேன் என்பதுதான். அதில் பி.சி. அதிகமாக இருக்கலாம் எஸ்.சி. அதிகமாக இருக்கலாம் எண்ணிக்கையில் வேண்டுமானால் அதிகமாக இருக்கலாம். ஆனால் இதற்கான கொள்கைகளை உருவாக்கக்கூடிய அதிகார கட்டமைப்பில் பார்ப்பனராகிய நாங்கள்தான் இருப்போம் என சபதம் போட்டனர். இன்றைக்கு நாடாளுமன்றத்தைவிட மிக செல்வாக்கான அமைப்பு முதலீடு கட்டுப்பாட்டு வாரியம் என்கிற செபி. ஏன், நெய்வேலியில் உள்ள பங்கை விற்கிறாய் என்று கேட்டால் எங்களால் ஒன்றும் செய்யமுடியாது செபி சொல்கிறது, செய்கிறோம் என்று சொல்லுகிறது ஆட்சி. செபியின் தலைவராக இருக்கிறவர் ரங்கராஜன் என்கிற பார்ப்பனர். அவர் ரிசர்வ் வங்கியிலே இருந்தவர்.

அந்த செபி உத்தரவு போடமுடியும், நடவடிக்கை எடுக்கமுடியும் சோதனை செய்யமுடியும், என்கிற அளவிற்கு யாருக்கும் தெரியாமல் அவசர, அவசரமாக ஒரு சட்டம் இரண்டு நாட்களுக்கு முன் பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஆக இந்தியாவின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கக்கூடிய பொறுப்பை செபி என்கிற ஒரு பார்ப்பன அமைப்பு ஏற்றுச் செய்து கொண்டுவருகிறது. இவர்களுக்கு உத்தரவு போடுகின்ற ஒரு அமைப்பு உலக வங்கி. அந்த வங்கி இந்த நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வியை தராதே, மருத்துவத்தை தராதே, அடிப்படை வசதிகளை செய்து கொடுக்காதே, மானியங்களை தராதே, மாறாக பங்கு வர்த்தகத்தை திறந்து விடு. மேலும் பன்னாட்டு முதலாளிகளுக்கு திறந்து விடு என்று உத்தரவு போடுகிறது. அந்த உலக வங்கியிலும் இந்த நாட்டில் உள்ள பார்ப்பனர்கள் தான் உயர் அதிகாரிகளாக வேலை செய்கிறார்கள்.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளு மன்றத்தைவிட அதிகார அமைப்புகள் வலிமை மிக்கவையாக மாறி வருகின்றன. இன்னொரு பக்கம் உச்சநீதிமன்றம் அது ஒரு பார்ப்பன மன்றம். அது அரசாங்கத்தை நடத்துகின்ற மன்றமாக மாறி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மன்றத்திற்கு உத்தரவு போடுகின்ற மன்றமாக அதிகாரத்தை கையில் எடுத்து விட்டது.

ஆகவே இந்த நாட்டில் அதிகாரத்தை செலுத்தக் கூடிய அத்தனை நிறுவனங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நாடாளுமன்ற பிரதிநிதிகளை துண்டித்துவிட்டு பார்ப்பன அதிகார வர்க்கம், உயர்ஜாதி அதிகார வர்க்கம், பன்னாட்டு நிறுவனம் பெரும் முதலாளிகள் கையாட்களாக மாறி நிற்கிறார்கள். இவர்கள்தான் இந்த நாட்டின் அதிகாரத்தை நிர்ணயிக்கக் கூடியவர்கள் என்கிற அளவிற்கு இந்த இந்திய தேசியம் கட்டமைக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட ஒரு அமைப்பில் இருந்து சுயமரியாதைக்கு போராடிக் கொண்டிருக்கிற மக்கள் வாழ்வுரிமைக்கு போராடிக் கொண்டிருக்கிற மக்கள் தங்கள் வாழ்வுரிமையை சுயமரியாதையை மீட்டெடுக்க முடியுமா?

இந்த வாழ்வுரிமைக்கும் சுயமரியாதைக்கும் நடத்துகின்ற போராட்டத்தில் இவர்களை மேலும் மேலும் பள்ளத்தில் கொண்டு போய் ஆழ்த்திக் கொண்டிருக்கிற இந்திய தேசியம் என்கிற இந்த பார்ப்பன பன்னாட்டு பகல் கொள்ளைக்காரர்களுடைய கோர முகத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி இந்த அரசுகளுக்கு எதிராக இந்த ஆட்சிகளுக்கு எதிராக இந்திய தேசிய பார்ப்பனீயத்திற்கு எதிராக தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை ஜாதி எதிர்ப்பு என்கிற தளத்தில், இந்துமத எதிர்ப்பு என்கிற தளத்தில் பெண்ணுரிமை மீட்பு என்கிற தளத்தில் ஒட்டு மொத்தமாக சுயமரியாதை என்கிற தளத்தில் அணி திரட்டி ஒரு சமத்துவத்தை நோக்கிக் கொண்டு செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு புறப்பட்டு இருக்கிற இந்த பயணத்திற்கு ஆதரவு தரவேண்டும் என்றார் விடுதலை இராசேந்திரன்.

**செய்தி : மன்னை இரா.காளிதாசு**


**'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?**

**ஆண்டுக்கட்டணம் ரூ.200**

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

DATE OF PUBLICATION 18.09.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# சென்னை, மன்னை, தூத்துக்குடியில் ஆர்ப்பாட்டங்கள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)



சென்னையில்

அதன் நிறுவனமான கோயிலை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ள பிறவி முதலாளியான பார்ப்பனர்கள் தொழில் முதலாளிகளான பனியா-பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலுக்கு கதவு திறந்துவிட்டு சமூக நீதியையும் அடித்தட்டு மக்களான தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளையும் நசுக்கி, சமூகத்தில் மேலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குவதை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

கேரள கோயில்களில் தங்கத்தின் இருப்புப் பற்றி ரிசர்வ் வங்கி விளக்கம் கேட்டதற்கே பார்ப்பனர்கள் எதிர்ப்பு தெரிவித்து பதிலளிக்க முடியாது என்று மிரட்டுகிறார்கள். நாட்டின் பொது சொத்துக்கள் அரசின் ஆளுகைக்கு உட்பட்டது. கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கம், நாட்டின் பொதுச் சொத்து. அதில் கையாடல், மோசடி நடந்தால் தலையிட்டு குற்றவாளிகளைத் தண்டிக்க அறநிலையத் துறைக்கும் அரசுக்கும் சட்டப்படி உரிமை உண்டு என்பதிலிருந்தே இவை அரசுக் கட்டுப்பாட்டுக்கு உரியவை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கோயிலில் முடங்கிக் கிடக்கும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள தங்கத்தை ரிசர்வ் வங்கிக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நாட்டின் தங்கத்தின் இருப்பை உயர்த்திக் காட்டும்போது பொருளாதார மதிப்பீடுகள் உயர்வதோடு, அமெரிக்க டாலரின் மிரட்டலையும் எதிர்கொள்ள முடியும். ஆனால், நாட்டின் பொதுச் சொத்தான கோயில் தங்கத்தை பார்ப்பனர்கள் ஏதோ தங்களின் சொத்துப் போல கருதி, அரசையே மிரட்டுவதிலிருந்தும், பார்ப்பன மிரட்டலுக்கு பணிந்து மத்திய அரசே கோயில் தங்கத்தில் கை வைக்க மாட்டோம் என்று அறிவிப்ப தும், நாட்டில் பார்ப்பன ஆதிக்கமே முதன்மை யானதாக இருப்பதை புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டு கோயில் சொத்து தமிழர்களின் சொத்து, அதை எடுக்கக் கூடாது என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது. நாம் இந்தியா முழுதுள்ள பணக்காரக் கோயில்கள் பற்றி பேசுகிறோம். தமிழ்நாட்டுப் பணக்காரக் கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை தமிழ்நாடு அரசு கணக்கில் எடுத்து, தமிழக அரசு சார்பிலேயே ரிசர்வ் வங்கியில் முதலீடு செய்யலாமே! நெருக்கடி தீர்ந்த பிறகு திருப்பிப் பெறலாமே! நிச்சயமாக பார்ப்பனர்கள் இதை அனுமதிக்க மாட்டார்கள். இங்கே உள்ள மத்திய ஆட்சியாளர்களுக்கும் மாநில அரசுக்கும் பார்ப்பன எதிர்ப்பை மீறி செயல்படக் கூடிய துணிவோ, ஆற்றலோ, கொள்கையோ இல்லை என்பது நமக்கு தெளிவாகவே தெரியும். ஆனால், நாட்டு மக்களின் வாழ்வுரிமையைவிட பார்ப்பனியத்துக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கும் கல் முதலாளி மீது கை வைக்க பார்ப்பனர்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள். இவர்கள் வெகு மக்களுக்கு எதிரானவர்கள் என்பதை மக்களிடம் அடையாளம் காட்டவே இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம்.

சுப்ரமணியசாமியும், இராமகோபாலனும் விசுவ இந்து பரிஷத்தும், பா.ஜ.க.வும் இதில் வெளிப்படையாகவே அடையாளம் காட்டிக் கொண்டனர். ரிசர்வ் வங்கி ஆளுநர் தொழில் முதலீட்டு வாரியத் தலைவர், நிதித் துறைச் செயலாளர், பிரதமருக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரிகள் உள்ளிட்ட முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டவர்கள் பார்ப்பனர்கள் தான். அவர்கள் தான் கொள்கை களையும் உருவாக்குகிறார்கள் என்பதை விளக்கி, விடுதலை இராசேந்திரன் பேசினார். முனைவர் ஜீவானந்தம் தனது உரையில், கடன் கொடுக்கும் உலக வங்கி, கடன் பெற்ற தொகையை எப்படி செலவிட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது என்ன நியாயம்? உலக வங்கி கட்டளையை ஏற்று, இந்தியா தனது பொருளாதாரக் கொள்கைகளை பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாகவே வகுப்பதை சுட்டிக்காட்டினார்.

**தூத்துக்குடியில்**

13.9.2013 அன்று மாலை 5 மணியளவில் தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கழகத் தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் க.மதன், திருவைகுண்டம் ஒன்றிய செயலாளர் தே.சந்தனராசு ஆகியோர் முன்னிலையில் ஆதித் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் க.கண்ணன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். நெல்லை மண்டலச் செயலாளர் கோ.அ.குமார் உரைக்குப்பின், திராவிடர் விடுதலைக் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், மாநகரத் தலைவர் சா.த.பிரபாகரன், மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, ஆதித் தமிழர் பேரவை பொறுப்பாளர் மதுரை வீரன் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகம், ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் திரளாகக் கலந்து




தூத்துக்குடியில்

கொண்டனர். இறுதியில் மாவட்டப் பொருளாளர் ரவிசங்கர் நன்றி கூற ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது.

**மன்னார்குடியில்**





டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் வீழ்ச்சியை கட்டுப்படுத்த கோவில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை மத்திய அரசு ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டுமென கோரி கழகத்தின் சார்பில் மன்னார்குடியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உலகமயம், தாராளமயம், புதிய பொருளாதார கொள்கைகளால் உள்நாட்டு தொழில் வளர்ச்சி முடங்கி, விவசாயம் நசிந்து, பெட்ரோல், டீசல் விலை வாரம்தோறும் உயர்ந்துகொண்டே போகிறது. அரசுத் துறை நிறுவனங்கள் குறைந்த விலைக்கு தனியாருக்கு விற்கும் சூழ்நிலை உருவாகி உலக வங்கியின் கட்டுப்பாட்டினால் மக்களின் அடிப்படை தேவைகளான கல்வி, மருத்துவம், விவசாய செலவினங்களுக்கு மானியங்களை குறைத்து மக்கள் அவதிப்படுவதற்கு காங்கிரசும், பா.ஜ.க.வும் முழு பொறுப்பேற்க வேண்டும். சரிந்த பொருளாதாரத்தை மீட்க மத்திய அரசு உடனடியாக நாடு முழுவதிலுமுள்ள கோவில்களில் முடங்கிக் கிடக்கும் சுமார் 30 ஆயிரம் டன் தங்கத்தை ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வலியுறுத்தி கழகத்தின் சார்பில் மன்னார்குடி பெரியார் சிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு, திருவாரூர் மாவட்ட கழகச் செயலாளர் காளிதாசு தலைமையேற்றார். மண்டல அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் இளையராஜா, நாகை மாவட்ட தலைவர் மகாலிங்கம், மன்னை நகர செயலாளர் மணிகண்டன், ஒன்றிய செயலாளர்கள் மன்னை சேரன், ரமேஷ், நீடா நல்லிக்கோட்டை முருகன், வலங்கைமான் கரிகாலன், அம்மாபேட்டை செந்தமிழன், கோட்டூர் அனுராசு, பேராவூரணி திருவேங்கடம், சேதுபாவா ஜெயசந்திரன், ஒரத்தநாடு கார்த்திகேயன், மாவட்ட அமைப்பாளர் பாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொதுச் செயலாளர் அரங்க குணசேகரன் கண்டன உரையாற்றினார்.

அவர் தமது உரையில், “உலகிலேயே தங்கம் அதிக கையிருப்பு உள்ள நாடு அமெரிக்கா. அங்கே தங்கம் முழுவதும் அரசு காப்பகத்தில் தான் உள்ளது. அதனால் தான் டாலர் தங்கமாக கருதப்படுகிறது. இரண்டாம் இடத்தில் இருக்கும் இந்தியாவில் ரிசர்வ் வங்கியில் இருப்பதைவிட கோயில்களில் தங்கம் அதிகமாக முடங்கிக் கிடக்கிறது. இந்தத் தங்கத்தை ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால் அது நாட்டின் பொருளாதார கையிருப்பாக மாறி நெருக்கடியில் இருந்து தற்காலிகமாக மீள முடியும் என வலியுறுத்தினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th September 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | செப்டம்பர் 26, 2013 | புரட்சி 12 | முழக்கம் 37 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...

✦ ‘வினாயகன்’ சிலை பால் குடிப்பதாக புரளி. கோயில்களில் பக்தர்கள் கூட்டம்.

**– செய்தி**

பால் குடித்த வினாயகன், சிறுநீர் கழித்தானா?

✦ தீண்டாமையில்லாத கிராமமாக பொள்ளாச்சி வட்டத்திலுள்ள சிங்கா நல்லூரை தமிழக அரசு தேர்வு செய்து பரிசு வழங்குகிறது.

**– செய்தி**

எப்படியோ தீண்டாமை இல்லாத ஒரு கிராமத்தை அரும்பாடுபட்டு கண்டு பிடித்து விட்டீர்களே! மகத்தான சாதனை போங்க!

✦ மூடநம்பிக்கைகளை ஒழிப்பதற்கு எல்லாம் சட்டங்களைக் கொண்டு வர முடியாது. **– ‘துக்ளக்’ சோ**

அப்போ, மூடநம்பிக்கைகளைப் பாது காப்பதற்கு சட்டம் கொண்டு வரலாமா?

✦ மயிலாடுதுறை – மயூரநாதசாமி கோயில் கோபுரத்தில் தங்கக் கலசம் திருட்டு; போலீஸ் மோப்ப நாய் வரவழைக்கப் பட்டது. **– செய்தி**

கவனம்! மோப்ப நாய் மாமிசம் சாப்பிடாத ‘சைவ’மாகவும், ‘அக்மார்க்’ இந்துவாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அறநிலையத் துறை அனுமதிக்காது.

✦ வினாயகன் சிலை வைப்பதில் தகராறு; கோவையில் சிவசேனை நிர்வாகி வீட்டில் பெட்ரோல் குண்டு வீசிய விசுவ இந்து பரிஷத்தினர் 8 பேர் கைது.

**– செய்தி**

வினாயகனே! தேர்தல் நெருங்கி வரும் காலத்தில் இந்துக்கள் ஒற்றுமை சீர் குலைவதற்கு நீயே காரணமாக இருக்கலாமா?

✦ தமிழக அரசின் அடக்குமுறைக்கு எதிராக தி.மு.க., தே.மு.தி.க. உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

**– மருத்துவர் ராமதாசு அழைப்பு**

அழைப்பு அனைத்து கட்சியிலும் உள்ள வன்னியர்களுக்கு மட்டுமா? அல்லது அனைவருக்குமா?

✦ திருச்சியில் மோடி பங்கேற்கும் மாநாட்டுக்கு டெல்லியிலிருந்து குண்டு துளைக்காத கார், குண்டு துளைக்காத மேடை திருச்சிக்குக் கொண்டு வரப்படுகிறது.

**– செய்தி**

அயோத்தியிலிருந்து ரதம் ஏதும் வரல்லியா?

✦ சென்னையில் காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயந்திரரின் 79 ஆவது ஜெயந்தி விழாவில் பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள் விருது வழங்கி கவுரவிக்கப் பட்டனர்.

**– ‘தினமணி’ படத்துடன் செய்தி**

இந்த விருதுக்கு ‘உயர்குடி ஒழுக்க சீலர்’ என்று பெயர் சூட்டினால் பொறுத்தமாக இருக்குமே!

### ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு வலியுறுத்துகிறார்

# பகுத்தறிவுப் பரப்புரையாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் தேவை

மூடநம்பிக்கைகளைப் பரப்புவதற்கு நீதிமன்றங்களே துணை போவதை சுட்டிக்காட்டியுள்ள உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி எஸ். சந்துரு, பகுத்தறிவுப் பரப்புரை செய்வோரை பாதுகாக்க சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

‘தி இந்து’ (செப். 22) தமிழ் நாளிதழில் இது குறித்து அவர் எழுதியது:

மராட்டிய மாநிலத்தில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக இயக்கம் நடத்திய தபோல்கரின் படுகொலை அறிவியல் பூர்வமாக சிந்திப்பவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நாடெங்கும் மூடர் கூடங்கள் உருவாவதை தடுக்க சட்டங்கள் வேண்டும் என்ற குரல்கள் அதிகரித்துள்ளன. மராட்டியத்தில் மூட நம்பிக்கைகளை எதிர்த்து பிரச்சாரம் செய்வோரை பாதுகாக்க புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்பவர்களை அரசே தண்டித்த வரலாறுகளும் உண்டு. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் மக்கள் பெருக்கத்துக்கு எதிராக குடும்பக் கட்டுப்பாட்டை அன்னிபெசன்ட் அம்மையார் வலியுறுத்தினார். அவர் கிறிஸ்துவ மதத்துக்கு எதிராக செயல்படுவதாகக் கூறி சிறையில் அடைத்தனர்.

1925 இல் டார்வினின் பரிணாம வளர்ச்சி விதி பற்றிப் பாடம் நடத்திய அறிவியல் ஆசிரியர் ஸ்கோப்ஸ், மதத்துக்கு எதிராக செயல்பட்டதாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார். இன்றும் சில அமெரிக்க மாநிலங்களில் அப்படியான போதனை செய்பவர்களை தண்டிக்க சட்டங்கள் உண்டு.

இந்தியாவும் இவ்விஷயத்தில் விதிவிலக்கு அல்ல. சமீபத்தில் உத்தரகாண்ட்டில் நடந்த இயற்கைச் சீற்றத்தை கடவுளின் சீற்றமாகக் கருதி பரிகார பூஜை செய்வது பற்றி அம்மாநில அரசே பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரங்களைக் கொடுத்தது. வரம்பு மீறிய கட்டுமானங்களும் அதற்காக செய்த வன அழிப்பும்தான் வெள்ளப் பெருக்குக்குக் காரணம் என்ற உண்மை மறைக்கப்படுகிறது. அறிவியல் வளர்ச்சியின் உச்சமாகக் கருதப்படும் அணு உலைகள் திறப்பிலும் தேங்காய் உடைக்கிறார்கள்.

நீதிமன்றங்கள் இவற்றைத் தடுப்பதற்கு பதிலாக பல நேரங்களில் உறுதுணையாக இருக்கின்றன. அரசு அலுவலகங்களில் ஒரு மதத்தின் சார்பாக கடவுள் சிலைகளையும் படங்களையும் வைத்து பூஜைகள் நடத்துவதை எதிர்த்துப் போடப்பட்ட வழக்குகள் அனேகமாக தள்ளுபடியே செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றக் கட்டிடங்களை கட்டும் போது பூமி பூஜையுடன் துவங்குவதும் தமிழகத்தில் பலமுறை நடந்துள்ளது.

1976 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு மக்கள் ஆற்ற வேண்டிய அடிப்படை கடமைகள் பிரிவு 51ஏ-வில் வரையறுக்கப் பட்டுள்ளன. அதில் அறிவியல் ரீதியான விசாரணையும் அறிவியல் மனப்போக்கும் அடிப்படைக் கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் கடமைகளை மறந்து மூடநம்பிக்கைகளைக் கடைப்பிடித்து வருகிறோம்.

பல்கலைக்கழக மானியக் குழு ஜோதிட படிப்பை அங்கீகரித்தபோது ஜோதிடம், விஞ்ஞானம் அல்ல என்று சிலர் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால், வழக்கை உச்சநீதிமன்றம் 2004 இல் தள்ளுபடி செய்துவிட்டது மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வோரை பாதுகாக்க சட்டம் இயற்றினால் மட்டுமே அறிவியல் பூர்வமான விசாரணைக்காக பிரச்சாரம் செய்வோருக்கு தைரியமும் அவற்றை எதிர்ப்பவர்களுக்கு அச்ச உணர்வும் ஏற்படும்.

## பொருளாதார நெருக்கடிக்கு கோயில் தங்கத்தை பயன்படுத்துக: திருப்பூரில் ஆர்ப்பாட்டம்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 17.9.2013 செவ்வாய் கிழமை மாலை 5 மணியளவில் கோவில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை எடுத்து நாட்டின் பொருளாதாரத்தை சரி செய்யக் கோரி திருப்பூர் ரயில் நிலையம் பெரியார் சிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மண்டல அமைப்புச் செயலாளர் விஜயன், செயலவைத் தலைவர் சு. துரைசாமி, மாவட்ட செயலாளர் க.அகிலன், மாநகர செயலாளர் ஜீவா நகர் குமார், மாநகர அமைப்பாளர் நீதிராசன், மாநகரத் தலைவர் சண்முகம், முகில்ராசு, உடுமலை நகர அமைப்பாளர் மலரினியன், உடுமலை ஒன்றிய அமைப்பாளர் குணசேகரன், மணிகண்டன், நகுலன், பிரசாத், மதுரை மணிகண்டன், தமிழ்நாடு மாணவர் கழகம் ராஜா, பாண்டித்துரை, சௌந்தர், விக்னேஷ், கௌதம் ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட அமைப்பாளர் செந்தில்குமார் நன்றி கூறினார். முன்னதாக பெரியாரின் 135 ஆம் பிறந்த நாளை முன்னிட்டு மாலை அணிவித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு முன்னதாக இந்நிகழ்வுக்கு காவல்துறை இந்துக்கள் மனது புண்படுகிறது என்று அனுமதி மறுத்தனர். தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடந்தது. காவல்துறையினர் முழு அளவில் வந்திருந்தனர். 6 பெண்கள் உள்பட 73 பேர் நிகழ்வில் பங்கேற்றனர்.

**தலையங்கம்**

## வடக்கு மாகா தேர்தல் முடிவுகள்

25ஆண்டுகளுக்குப் பிறகு ஈழத்தில் வடக்கு மாகாணத்தில் நடந்த தேர்தலில் மொத்தமுள்ள 38 இடங்களில் 30 இடங்களில் வெற்றி பெற்று மாகாண நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டணி. ஓய்வு பெற்ற இலங்கை உச்சநீதிமன்ற நீதிபதி சி.வி. விக்னேசுவரன் முதல்வராகப் பொறுப்பேற்கிறார். ராஜபக்சேயின் அய்க்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 7 இடங்களையும் இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் கட்சி ஒரு இடத்தையும் கைப்பற்றி யுள்ளன.

இது இலங்கையை ஆளும் ராஜபக்சே ஆட்சிக்கு எதிராக தமிழர்கள் வழங்கிய தீர்ப்பு என்பதில் இரண்டு வித கருத்துகளுக்கு இடமில்லை; போருக்குப் பிறகு ராஜபக்சே தமிழர் பகுதியில் மேற்கொண்ட ‘புனரமைப்பு’ நட வடிக்கைகளை ஊதிப் பெருக்கியும் அரசு செயல்பாடுகளால் தமிழர்கள் ராஜபக்சே ஆட்சியின் மீது கொண்டிருந்த வெறுப்பு குறைந்துவிட்டது என்றும் திட்டமிட்டு சில பார்ப்பன ஏடுகள் பரப்பிய கருத்துகள் உண்மையல்ல என்பதையும் இத்தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது. அதேபோல் இந்த மாற்றம் தமிழர் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளைக் கொண்டு வரப் போவதும் இல்லை என்பதும் மாகாண கவுன்சிலின் அதிகாரங்கள் முழுமையாக பறிக்கப்பட்ட நிலையில் இலங்கை அரசின் பிரதிநிதியான ஆளுநர் கண்காணிப்பின் கீழ் தான் மாகாண ஆட்சி செயல்பட வேண்டும் என்பதும் உண்மை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் – தமிழ் ஈழ விடுதலைக்காக இலங்கை இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கியப் போராட்டம் நடத்தியபோது தமிழ் ஈழத்தையும் விடுதலைப்புலிகள் போராட்டத்தையும் நாம் முழுமையாக ஆதரித்தோம். இந்தியா உள்ளிட்ட சர்வதேச சூழ்ச்சிகளால் அந்தப் போராட்டம் முறியடிக்கப்பட்டது.

ஆயுதப் போராட்டத்தின் நோக்கமே அரசியல் இலக்கை விரைவுபடுத்துவது தான். ஆயுதப் போராட்டம் மவுனித்த நிலையில் போராட்டக் களம் அரசியலை மய்யமாகக் கொண்டே இயக்க வேண்டிய நிலை உருவானது. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் அரசியல் களம் நோக்கி ஈழத் தமிழர் பிரச்சினையை கொண்டுச் செல்லும் களப்பணி களிலேயே இறங்கியுள்ளனர்.

இப்போது வடக்கு மாகாணத்தில் தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி, தமிழர்களுக்காக பேசக் கூடிய அதிகாரத்தையும் உரிமையையும் பெற்று நிற்கிறது. தமிழ் ஈழம் என்ற கோரிக்கையோடு இலங்கையில் தமிழர்களுக்கான அரசியல் கட்சிகள் இயங்குவதற்கு அந்நாட்டில் தடை போடப்பட்டுள்ள நிலையில் ‘ஒன்றுபட்ட இலங்கை’ என்ற கோட்பாட்டை ஏற்றுத்தான் அவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும். ஆனாலும் தந்தை செல்வா காலத்திலேயிருந்து அங்கு நடைபெற்ற தேர்தல்களில் தமிழர்களின் வாக்குரிமையை தமிழ் ஈழம் என்ற இலக்கை நோக்கியே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அதன் நீட்சியாகவே இந்த தேர்தல் முடிவுகளையும் நாம் பார்க்க வேண்டும்.

இப்போது மக்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள், அரசியல் உரிமைகள் என்ற இரண்டு பிரச்சினைகள் புதிய ஆட்சியின் முன் சவாலாக எழுந்து நிற்கின்றன. இதில் எந்தப் பிரச்சினைக்கு முன்னுரிமை என்ற கேள்விக்கே இடமில்லை. மக்கள் வாழ்வுரிமைத் திட்டங்களை முன்னெடுக்கும்போதே ஆட்சியின் அதிகாரமற்ற நிலையும் இணைந்தே நிற்கும். ராஜபக்சே ஆட்சி எத்தகைய நேர்மையோடு மக்கள் வழங்கிய தீர்ப்பை மதித்து செயல்படப் போகிறது என்பதையும் சர்வதேச சமூகம் இனி கவனிக்கவே செய்யும்.


ராஜபக்சேயின் நேரடி இராணுவ அடக்குமுறையில் தவித்த மக்களுக்கு, அதற்கு மாற்றாக ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்திருக்கும் நிலையில் ஒரு ஆட்சிக்கான அதிகார உரிமையோடு ஈழ மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துக்குக் கொண்டு போகும் ஒரு நல்ல வாய்ப்பாகவே இந்த மாற்றத்தை நாம் பார்க்கிறோம்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் தமிழகம் வாழும் தமிழர்களும் தமிழ் ஈழ மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுகளை முன்னெடுப்பதற்கு அங்கே அமைந்துள்ள தமிழர் ஆட்சி எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் சவால்களுமே அடிப்படையாக அமையும். இந்த எதார்த்தங்களை கவனத்தில் கொண்டு ஈழத் தமிழர் அரசியல் விடுதலைக்கான செயல்பாடுகளை வகுத்துக் கொள்வதே சரியான அணுகுமுறையாக இருக்கும். ராஜபக்சே ஆட்சியானாலும், அல்லது வேறு எந்த சிங்களர் கட்சி ஆட்சியானாலும் அது தமிழர்களின் உரிமைகளை ஒரு போதும் அங்கீகரிக்கப் போவது இல்லை என்ற நிலையில் சர்வதேச சமூகத்தின் முன் இந்த ஒடுக்குமுறை ஆட்சியாளர்களை அடையாளம் காட்டுவதற்காக வலிமையான அரசியல் ஆயுதமாக ஈழத் தமிழர்கள் தங்கள் வாக்குரிமை வழியாக ஆட்சி நிர்வாக அமைப்பு ஒன்றை வழங்கியுள்ளார்கள் என்ற பார்வையோடு புதிய ஆட்சியை நாம் வரவேற்போம்!

# கூடங்குளம் : வழக்குகளை திரும்பப் பெறக் கோரி அக். 2 இல் தொடர் முழக்கப் போராட்டம்

கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் கடந்த செப்டம்பர் 17 ஆம் தேதி தமிழக அரசின் உள்துறை செயலாளரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொல். திருமாவளவன், வேல்முருகன், இயக்குநர் சீமான், பேராசிரியர் ஜவஹிருல்லா உள்ளிட்டோர் நேரில் கையளித்த மனுவில் கூடங்குளத்தில் போராடிய மக்கள் மீது அரசு தொடர்ந்த வழக்குகளை உயர்நீதிமன்ற உச்சநீதிமன்ற தீர்ப்புகளை மதித்து கைவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. இதே கோரிக்கையோடு கூடங்குளம் அணுஉலையை மூடு என்ற கோரிக்கையையும் இணைத்து அக்டோபர் 2 ஆம் தேதி கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் மாவட்ட தலைநகர்களில் தொடர் முழக்கப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# சென்னையில் பெரியார் பிறந்த நாள் பொதுக் கூட்டம்






மயிலைப் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 15.9.2013 அன்று சிறுவர்களுக்கான கால்பந்து போட்டி நடைபெற்றது. 16 அணிகள் பங்கேற்றனர். மருத்துவர் எழிலன் கால்பந்து போட்டியை காலை 8 மணியளவில் துவக்கி வைத்து, கால்பந்து போட்டியின் இன்றைய நிலை பற்றி சிறுவர்களுக்கு கருத்துரை வழங்கினர்.

17..9.2013 செவ்வாய் கிழமை மாலை மந்தைவெளி மார்க்கெட் அருகில் பெரியாரின் 135 ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. பூர்ணிமா தலைமை வகிக்க, ஜா. உமாபதி, அ.பார்த்திபன் முன்னிலையில் அ.சிவா வரவேற்புரையாற்ற, வழக்கறிஞர் திருமூர்த்தி, துரை அருண், ஆதித் தமிழர் பேரவை நிதித் துறை செயலாளர் நீலவேந்தன், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். நிகழ்வின் தொடக்கத்தில் புதுவை தலித் சுப்பையா குழுவினர் எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மா. சுனிதா நன்றியுரையாற்றினார்.

15.9.2013 அன்று கால்பந்துப் போட்டியில் வெற்றி பெற்ற ரவி செலக்டர் அணிக்கு முதல் பரிசும், இரண்டாம் பரிசு சாய் செலக்டர் அணிக்கும் கழகத் தலைவர் பரிசுகளையும் கோப்பைகளையும் வழங்கினார்.

### பெரியார் சிலைக்கு மாலை

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 17.9.2013 அன்று காலை 8 மணிக்கு அண்ணா சாலை பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாலை அணி விக்கப்பட்டது. 8.30 மணிக்கு மந்தைவெளி செயின்ட் மேரிஸ் பாலத்தில் கழகத்தின் கொடியை தலைவர் கொளத்தூர் மணி ஏற்றி வைத்தார். பிறகு 9 மணிக்கு வி.எம். தெருவிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. திருவல்லிக்கேணி பகுதித் தோழர்கள் காலை உணவு ஏற்பாடு செய்தனர். கழகப் பொதுச் செய லாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலை யச் செயலாளர் தபசி. குமரன், சென்னை மா வட்ட தலைவர் பா. ஜான், செய லாளர் இரா. உமாபதி, பொரு ளாளர் வேழ வேந்தன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.



## தாழ்த்தப்பட்ட பெண் ரவிக்கை அணிவதை பெரியார் எதிர்த்தாரா?

# திரிபுவாதங்களுக்கு மறுப்பு: பெரியாரே விளக்குகிறார்

*தாழ்த்தப்பட்ட பெண்கள் இரவிக்கை அணிவதையே பெரியார் எதிர்த்ததாக உண்மைக்கு மாறான ஒரு செய்தி திட்டமிட்டு பரப்பப்பட்டு வருகிறது. பெரியார் வாழ்ந்த காலத்திலேயே இந்த செய்தியை பரப்பியபோது, அதை மறுத்து பெரியார் ஆற்றிய உரை 'விடுதலை' 15.12.1968 இல் இடம் பெற்றுள்ளது. உரை விவரம்:*

இன்றைய தினம் பெருமை மிக்க மேயர் (வேலூர் நாராயணன்) அவர்களைப் பாராட்டுவதற்காக கூட்டப்பட்ட கூட்டமாகும். இதிலே எனக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இன்று காலை இருமலுக்காக டாக்டரைப் போய்ப் பார்த்தேன். அவர் மருந்து கொடுத்தார். அதைச் சாப்பிட்டேன். சாயந்திரம் திடீரென்று கைகால் எல்லாம் நடுக்கமேற்பட்டது. மார்பு துடிப்பு 150க்கு வந்துவிட்டது. சாதாரணமாக 72-75 தான் இருக்க வேண்டும். கைகால் விரல்கள் மடக்கினால் வலிக்க ஆரம்பித்தது. உடனே டாக்டரிடம் சென்று காண்பித்தேன். அவர் காலையில் கொடுத்த மருந்தின் ரீ-ஆக்ஷன் தான் அது வேறொன்றுமில்லை. உங்களுக்கு வயது அதிகமானதால் கொஞ்சம் அதிகமாக இருந்திருக்கும். வேறொன்றுமில்லை என்று சொல்லி ஒரு ஊசியைப் போட்டு என்னை இரண்டு நாள்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி சொன்னார். சாயந்திரம் பேச வேண்டுமே என்று சொன்னேன். நல்லா பேசுங்க என்று சொன்னார். அதன் பின் தான் கூட்டத்திற்கு வர முடிந்தது.

நான் கூட்டத்திற்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் போது எனக்கு போன் வந்தது. போனில் பேசியவர்கள் நம்முடைய மாண்புமிகு அமைச்சர், அம்மையாரவர்களை (திருமதி சத்தியவாணி முத்து) மேயரவர்கள் சாதியைக் குறித்துக் கேவலமாகப் பேசியதாக குறிப்பிட்டார்கள். அதற்கு நான் அவர் அப்படிச் சொல்லி இருக்க மாட்டார் என்று நினைக்கின்றேன். அவர் படித்தவர், பெரிய பதவி வகிப்பவர், சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவர். அவர் அப்படிப்பட்ட வார்த்தையை உபயோகித்திருக்க மாட்டார். அப்படி அவர் சொல்லியிருந்தால் நானே கண்டிக்கின்றேன். மன்னிப்பு கேட்கச் செய்கின்றேன் என்று சொன்னேன். மேயரவர்களைக் கேட்டதற்கு நான் சொல்லவில்லை என்று சொன்னார்.

சாதி சம்பந்தமான காரியங்களில் நான் ரொம்ப முயற்சி எடுப்பவன். அதற்காகவே வாழ்வதாகக் கருதுபவன். பறையன் - சக்கிலி - வண்ணான் - பரியாரி என்பது அவமானமல்ல. தொழிலின் காரணமாக வந்தது. பார்ப்பனர் தன்னை மேன்மைப்படுத்திக் கொள்ளவும் நம்மை இழிசொல்லாக்கி விட்டான். ஆனால், நம் எல்லோரையும் சேர்த்து பார்ப்பான் தேவடியாள் மகன் என்று சொல்கின்றான். சொல்வது மட்டுமல்ல, சாஸ்திரத்திலும் அப்படியே எழுதி இருக்கின்றான். சட்டத்திலே (இந்தியாவிலே) தாசி புத்திரன் என்றே இருக்கிறது. அனுபவத்திலுமிருக்கிறது என்று சொன்னால் கோயிலுக்குப் போகிறவன் அத்தனை பேரும் தேவடியாள் மகன் தானே! இது அண்ணாதுரைக்கும் தான், 'ராஜா சர்'ருக்கும் தான். வேறு பார்ப்பனரல்லாத எல்லோருக்கும் தான்.

பறையன் என்று சொல்லக் கூடாது என்று தான் சொன்னார்களே தவிர, தண்ணீருக்கு எப்படி ஜலம் என்று சொல்கின்றானோ அதுபோல பார்ப்பான் காந்தியாரைப் பிடித்து பறையன் என்கிறதை நிலை நிறுத்துவதற்காக அரிஜன் என்று சொல்லி இன்னும் அதையே சொல்லிக் கொண்டிருக்கின்றான்.

பறையன் என்று சொல்லக் கூடாது என்று ஆரம்பித்தவன் நான். காந்தியார் தீண்டாதவர்களுக்குக் கிணறு வெட்டுவதற்காகக் காந்தி திலக் நிதியிலிருந்து ரூ.55,000 அனுப்பினார். அப்போது நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவன். நான் அதை இதற்காக செலவிடாமல் அப்படியே வைத்து விட்டேன். மற்ற மாகாணக்காரர்கள் எல்லாம் செலவழித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாகக் கேணி, கோயில், பள்ளிக்கூடம் கட்டினார்கள். நான் காந்தியாருக்கு எழுதினேன். நாம் அவர்களுக்கு இவை எல்லாம் தனியாகச் செய்து கொடுப்பதால் ஒருக்காலும் தீண்டாமை ஒழியாது. அதற்குப் பதில் பறையன் கோயில், பறையன் பள்ளிக்கூடம் என்று சொல்லி மக்கள் அதையும் ஒதுக்கிவைத்து விடுவார்கள். இதை நான் விரும்பவில்லை. நம் மக்கள் தண்ணீர் எடுக்க வேண்டும். நம் மக்கள் படிக்கிற பள்ளிகளில் அவர்களையும் படிக்க அனுமதிக்க வேண்டும். நம் மக்கள் போகிற கோயில்களுக்கு அவர்களும் போக உரிமை வழங்க வேண்டும் என்று எழுதினேன். அதற்கு அவர் அதுபோல செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்.

"நான் பறையன் என்று கேவலமாகச் சொன்னதாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடம் சொல்லியிருக்கின்றார்கள். நான் பல தடவை இந்தச் சொல்லைச் சொன்னாலும் அதை ஒழிப்பதற்காக சொன்னதுதான். எலக்சன் போது ராமசாமி நாயக்கர் பறைச்சி எல்லாம் ரவிக்கைப் போட்டுக் கொண்டார்கள் என்று தாழ்த்தப்பட்ட பெண்களைக் கேவலமாக சொன்னார் என்று விளம்பர நோட்டீஸ்களெல்லாம் போட்டு தாழ்த்தப்பட்ட மக்களே அவர் ஆதரிக்கிற கட்சிக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று வால் போஸ்டர்கள் ஒட்டி இருக்கின்றார்கள். அதைக் கண்ட சிலர் என்னிடம் வந்து நீ எப்படி சொல்லலாம் என்று கேட்டார்கள். நான் சொன்னது உண்மைதான். நான் தாழ்த்தப்பட்ட பெண்கள் இதற்கு முன் ரவிக்கைப் போடக் கூடாது, போட்டால் துணியே போடக் கூடாது. அப்படி இருந்த சமுதாயம் கால மாறுபாட்டால் எப்படி ஆகி இருக்கின்றது? இன்றைக்கு ரவிக்கையில்லாமல் பார்க்க முடியவில்லை என்று சொன்னேன். இதைக் கொண்டு அந்த இன மக்களை எனக்கு ஓட்டுப் போடாமல் செய்வதற்காகக் கிளப்பி விடப்பட்டதே ஆகும்" என்பதை விளக்கியதும் அவர்கள் புரிந்து கொண்டனர்.

இன்று காலை ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்தேன். அய்க்கோர்ட் ஜட்ஜ் கைலாசக் கவுண்டரின் மகளுக்கும் ராஜா சர் முத்தய்யா செட்டியாரின் தங்கை மகனுக்கும் (ப. சிதம்பரம்) நடைபெற்ற திருமணம். இதைக் கலப்புத் திருமணம் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை எது கலப்புத் திருமணம் என்றால் மனித ஜாதிக்கும் மிருகத்திற்கும் நடப்பதே கலப்புத் திருமணமாகும்.

ஒரே ஜாதி மனித ஜாதி என்பது மாத்திரமல்லாமல் மணமக்கள் இருவருமே சூத்திர ஜாதி நாலாஞ் சாதியைச் சார்ந்தவர்கள் என்பதோடு நாலாம் சாதி நடுத்தர சாதியாக இருப்பதைப் பற்றிச் சிறிதும் வெட்கப்படாத சாதியைச் சார்ந்தவர்களாவார்கள். நான் தாழ்த்தப்பட்ட பெண்ணிற்கும் பார்ப்பானுக்கும், பார்ப்பனத்திற்கும் தாழ்த்தப்பட்ட ஆணுக்கும் இன்னும் இது போன்று பல சாதி கலப்புள்ள நூற்றுக்கணக்கான திருமணங்களைச் செய்து வைத்திருக்கின்றேன்.

ஜாதி என்பது ஒன்றுதான். இரண்டு பேர்களும் பார்ப்பானுக்கு வைப்பாட்டி பிள்ளைகள்தான். ஜாதியைக் காப்பாற்றத் தான் இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளும் இராஜாஜிகூட தன் மகளைச் சூத்திரரான காந்தியின் மகனுக்குத்தான் திருமணம் செய்து கொடுத்திருக்கின்றார். காங்கிரசினால் காமராஜரும் அவருடைய கம்பெனியும் தவிர மற்றவர்கள் அத்தனை பேரும் இராஜாஜியின் சீடர்கள்தான். இராஜாஜி அவர்கள் நம்மோடு தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டில் சாப்பிடுவார். தன்னுடைய மகளைச் சூத்திரனான காந்தியின் மகனுக்குக் கொடுத்திருக்கிறார் என்றாலும் பிள்ளைகளை (பேரன்களை)யெல்லாம் பூணூல் மாட்டிப் பார்ப்பானாக்கி விட்டார்.

தேவதாசி வகுப்பைச் சேர்ந்த எம்.எஸ். சுப்புலக்ஷ்மியை ஜாதியைக் காப்பதற்கென்றே பத்திரிகை நடத்துகின்ற 'கல்கி' பத்திரிகையின் அதிபர் சதாசிவம் என்ற பார்ப்பனர் திருமணம் செய்து கொண்டார். அவருக்குத்தான் இராஜாஜி முன்னோடும் பிள்ளையாக இருக்கிறார்.

இப்படி ஏராளமான பெரிய இடம் என்று சொல்லும்படியான இடங்களிலெல்லாம் நடைபெற்று இருக்கிறது. நாட்டுக்கோட்டை செட்டியார் வகுப்பிலேயே மாறுபட்ட ஜாதியைச் சார்ந்த பலரைத் திருமணம் செய்து வைத்திருக்கின்றேன். அதற்கெல்லாம் இராஜா சர் (முத்தையா செட்டியார்) வந்து பாராட்டியிருக்கின்றார். இராஜா சர் எனக்கு ரொம்பவும் வேண்டியவர். நான் செய்கின்ற காரியங்களை எல்லாம் பாராட்டுபவர். எனது மதிப்பிற்குரியவர். பணத்தில் மட்டுமல்ல, உண்மையிலேயே பெருந்தன்மை வாய்ந்த பெரியவர். அவர் அந்த சமுதாயத்தையே திருத்த வேண்டியவராவார். அவர் இத்திருமணத்திற்கு வராததன் மூலம் தனக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பையே இழந்து விட்டார் என்று தான் சொல்லுவேன்.

பார்ப்பானைத் தவிர ஜாதியைப் பற்றி பேசுகின்றவன் அத்தனை பேரும் பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகனேயாவான். **என்னைப் பொருத்தவரை நான் பறையனாக இருப்பதை கேவலமாக கருதவில்லை. சூத்திரனாக இருப்பதைவிட பறையனாக இருப்பதை பெருமையாகக் கருதுகின்றேன்.** எனக்குப் பிள்ளை இல்லை என்பது பற்றி ரொம்ப சந்தோசப்படுகின்றேன். ஒரு சமயம் பிள்ளையிருந்தால் அதுவும் பெண்ணாக இருந்தால், மாண்புமிகு சத்தியவாணி முத்து அம்மையார் மகனுக்குக் கொடுத்திருப்பேன் அல்லது சிவராஜ் மகனுக்குக் கொடுத்திருப்பேன். காதல் மணம் வேண்டுமென்கிற நீ இப்படிச் சொல்லலாமா என்று கேட்பீர்கள். காதல் ஏற்படும் முன்பே சொல்லி விடுவேன். இதுபோல தாழ்ந்த சாதி பையன்களைப் பார்த்து காதல் செய் என்று சொல்லி விடுவேன். தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி அய்யா (வேலூர் நாராயணன்) அவர்கள் அப்படி கருதி இருப்பாரானால் அவர் முன்னேற்றக் கழகத்திலிருப்பதற்கே லாயக்கற்றவர்தான். அவர்களைப் பார்த்து பறையர் என்று சொல்லி விட்டோம். அவர்களிலே வைப்பாட்டி மகன் இல்லை. நம்மில் தான் வைப்பாட்டி மகன் என்று இருக்கிறது. தாழ்த்தப்பட்ட பெண் தானாகப் போனால்கூட பார்ப்பான் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

நாம் ஜாதியை ஒழிக்க வேண்டும். நம் நாட்டில் இரண்டே ஜாதி தான் இருக்கிறது. ஒன்று பார்ப்பான். மற்றொன்று சூத்திரன். இதைத் தான் ஒழிக்க வேண்டும். ஒழியாமல் பாதுகாப்பதற்காகத் தான் பார்ப்பான், செட்டி, முதலி, நாயக்கர், கவுண்டன், படையாச்சி என்று நமக்குள் பல சாதிகளைப் பிரித்து அதில் ஒன்றுக்கொன்று நம்மை ஒன்று சேர விடாமல் பிரித்து வைத்திருக்கின்றான்.

நாங்கள் தமிழர்கள், சூத்திரர்கள் அல்லர். இந்துக்கள் அல்ல என்கிற உணர்ச்சி நம் மக்களுக்கு வரவேண்டும். இன்றைய தினம் இந்த பேச்சு பேசியதற்கு அம்மையாரிடம் அய்யா மேயர் அவர்களிடமிருக்கிற அன்பைவிட அதிகமான அன்பு கொண்டிருக்கின்றேன். அம்மையாரும் பெருமைமிகு மேயரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். நமக்குள் இதெல்லாம் இருக்கக் கூடாது.

***('விடுதலை' 15.12.1968)***

## துர்கா பூஜை கொண்டாட்டம்: கல்கத்தா உயர்நீதிமன்றம் கண்டனம்

துர்கா பூஜைகளை நடத்தும் அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும் சாலைகளை ஆக்கிரமித்து பந்தல்களைப்போட்டு 'குண்டர்'களைப்போல் செயல்படுகிறார்கள் என்று கல்கத்தா உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. கடந்த செப். 17 ஆம் தேதி பாலியல் தொழிலாளர்களான பெண்களின் அமைப்பான 'தர்பார் சமன்வே மகிளா கமிட்டி' துர்கா பூஜை நடத்துவதற்கு கல்கத்தா காவல்துறை போக்குவரத்து நெரிசலை காரணம் காட்டி அனுமதி மறுத்தது. இதை எதிர்த்து பெண்கள் அமைப்பு வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி சானிப் சட்டர்ஜி துர்கா பூஜைக்கு அனுமதி வழங்க உத்தரவிட்டார்.

அப்போது சாலையின் குறுக்கே பெரிய பந்தல்களைப் போட்டு பூஜைகள் நடத்தும் அமைச்சர்கள், அரசியல் தலைவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்குவது ஏன்? அமைச்சர்கள் குண்டர்களைப்போல் செயல்படுகிறார்கள் என்று குறிப்பிட்டதோடு இத்தகைய துர்கா பூஜை கொண்டாட்டங்கள் போக்குவரத்துகளுக்கு இடையூறு இல்லாமல் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

DATE OF PUBLICATION 25.09.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ஜாதி மறுப்பு வாழ்வியல் விழா

ஜாதி மறுப்புத் திருமணம் செய்தவர்கள் - செய்யப் போகிறவர்கள் - செய்து வைக்க உள்ளவர்களுக்கான பண்பாட்டைச் செயலாக்கும் முயற்சி

நாள் : அக்டோபர் 20, 2013 ஞாயிறு

இடம் : திருப்பூர் டவுன் ஹால்

நிகழ்வுகள்: பண்பாட்டு மலர் வெளியீடு - கலைநிகழ்ச்சிகள் - வீர விளையாட்டுகள் - குழந்தைகள் கலை வெளிப்பாடு - குறும்படப் போட்டி

அரங்குகள்: ஜாதி மறுப்புத் திருமணம் - இயற்கை விவசாயம் - சிறுதானிய உணவு - ஆடை விற்பனை - கட்டிட நிறுவனங்கள் - புத்தகம் - பிறப்பு முதல் இறப்பு வரையிலான பண்பாட்டு அரங்குகள்.

திராவிடர் உணவு விழா : தென்னம்பால், தேன்நெல்லிச் சாறு, மாடு வால் சூப், மாட்டு பிரியாணி, மாடு மிளகு வறுவல், கேழ்வரகு இட்லி, கம்பு தோசை, பிரண்டை சட்னி, வாழைப்பூ குருமா, கொள்ளு ரசம், குதிரை வாலி தயிர்ச் சோறு.

இருவேளை உணவு : நன்கொடை ரூ.200/- மட்டுமே

உணவு விழா முன் பதிவுக்கு : 9445682092

– சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்

Email: sukapaka@gmail.com - www.suyamariyathai.org.

# வீணாகும் காவிரி நீரை தடுக்கக் கோரிக்கை

தமிழ்நாட்டில் கடந்த ஓராண்டுகளாக கடுமையான வறட்சி நிலவி வந்தது; அன்மைக் காலத்தில் திடீரென பெய்த மழையால், காவிரிக்கு வந்த நீரில் ஒரு பெரும் பங்கான நீர் - மேட்டூர் அணையின் கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கு நீர் கடலில் போய் வீணாக கலந்து போனது. (இந்த ஆண்டு மட்டும் 25 டி.எம் சி தண்ணீர் கடலுக்குள் போனது) இந்த வேளையில் காவிரி நீரைப் பயனுள்ள வகையில் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையோடு 22-09-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10-00 மணியளவில், சேலம் மாவட்டம் கொளத்தூரிலிருந்து, ஈரோடு மாவட்டம் அந்தியூர் வரை, “மேட்டூர் உபரி நீர் திட்டம் நிறைவேற்ற வலியுறுத்தி” விவசாயிகள் பொதுமக்களின், இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது.

தமிழக ஐக்கிய விவசாயிகள் சங்கம் ஒருங்கிணைத்த இந்த நிகழ்ச்சிக்கு அந்த அமைப்பின் மாவட்டச் செயலாளர் இராஜேஸ்வரன் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் ஈ.வி.கே சண்முகம் தொடக்க உரை ஆற்றினார். இயற்கை வாழ்வுரிமை அமைப்பின் அமைப்பாளர் பொடாரன் வாழ்த்துரை வழங்கினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றி, பேரணியை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். மாரப்பக்கவுண்டர், முஸ்தபா, மக்கள் மன்ற தோழர் செல்லப்பன், தி.வி.க மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் உட்பட ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டனர்.

உபரி நீராகக் கடலில் வீணாகும் நீரைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக தோணிமடுவு அருகே ஒரு தடுப்பணைக் கட்டப்பட்டு, அந்தியூர், ஆப்பக்கூடல் வரை வறண்டு போய் இருக்கிற பகுதிகளுக்கு பாசனம் கிடைக்கிற வகையில் இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தப் பயணத்தை எடுத்திருக்கிறார்கள் என்று கழகத் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## ‘மேஜர் கிண்ணி’ புதுவையில் நூல் வெளியீடு



விடுதலைப் புலிகள் அமைப்பில் முக்கிய பங்கு வகித்த, “மேஜர் கிண்ணி” (ஒரு புலி வீரனின் போர் அனுபவம்) நூல் வெளியீட்டு விழா, 21-09-2013 சனிக்கிழமை மாலை புதுவை மாநிலம் சிங்காரவேலர் சிலை அருகில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக நடைபெற்ற இந்த விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலினை வெளியிட, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி. வேல்முருகன் பெற்றுக்கொண்டார். முன்னதாக அரியாங்குப்பம் கழகத் தோழர் கருணாகரன் குழுவினரின் வீர விளையாட்டுகளும், தேனிசை செல்லப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# சேலம் கிழக்கு மாவட்டத்தின் சார்பில் பெரியார் சிலைக்கு மாலை





பெரியாரின் 135 ஆவது பிறந்த நாள், சேலம் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக மாவட்டத் தலைவர் (கிழக்கு) தோழர் க. சக்திவேல தலைமையில் காலை 10 மணியளவில் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்டத் துணைத் தலைவர் ஏற்காடு பெருமாள், மாவட்ட செயலாளர் இரா. டேவிட், மாவட்ட பொருளாளர் வீரமணி, மாவட்ட அமைப்பாளர் இளம்பிள்ளை முத்து மாணிக்கம், மாநகரத் தலைவர் சரவணன், மாநகர அமைப்பாளர் பாலு மற்றும் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் பெரியார் சிலையிலிருந்து இரு சக்கர பேரணியாகச் சென்று மாநகரங்களில் பல இடங்களில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரு சக்கர பேரணியின் தொடர்ச்சியாக இளம்பிள்ளை பகுதிகளுக்குச் சென்று பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தல், பல இடங்களில் கழகக் கொடிகளை ஏற்றுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இரு சக்கரப் பேரணியில் 22 இரு சக்கர வாகனமும், 34 தோழர்களும் கலந்து கொண்டனர். மதிய உணவு அனைத்துத் தோழர்களுக்கும் இளம்பிள்ளை பகுதி தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 26th September 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.